பக்கங்கள்-16 | 27,டிசம்பர்.2020 | விலை-30.00






# தினப்புயல்

PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -327




## முஸ்லீம்களின் ஜனாசா எரிப்பு விவகாரம் அரசியல் மயமாக்கப்படுகிறதா?



## ஐ.நா சபையின் கூட்டத் தொடர்களும் ஏமாற்றப்படும் தமிழினமும்

## தமிழ் கட்சிகளின் பிளவும், அரச புலனாய்வின் காய்நகர்த்தல்களும்



-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# முஸ்லீம்களின் ஜனாசா எரிப்பு விவகாரம் அரசியல் மயமாக்கப்படுகிறதா?

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக உலகளாவிய ரீதியில் 17 இலட்சத்திற்கு மேல் மரணங்கள் பதிவாகியிருக்கின்றன. இந்த நிலையில் சீனாவைத் தவிர கொரோனா தொற்று பரவியுள்ள ஏனைய நாடுகளில் இத் தொற்றின் காரணமாக இறப்பவர்களின் உடல்களை தகனம் செய்ய அல்லது நல்லடக்கம் செய்வதற்கு அந்தந்த நாடுகளின் அரசுகள் அனுமதி வழங்கியுள்ளன. ஆனால் இலங்கையில் மாத்திரம் இத் தொற்றின் காரணமாக இறப்பவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்வதற்கு அரசாங்கம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. இறப்பவர்களின் உடல்கள் அனைத்தும் தகனம் செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த 30 வருடகால யுத்தத்தின் போது இலங்கை அரசுடன் அரச ஒட்டுக்குழுக்களாகப் பணிபுரிந்த ஒரு சில முஸ்லீம் அரசியல்வாதிகள், சில முஸ்லீம் அமைப்புக்கள் இன்று ஜனாசா எரிப்பு விடயம் தொடர்பாக செய்வதறியாது இருக்கின்றனர். கடந்த காலங்களில் அரசாங்கம், விடுதலைப்புலிகள் இருவருமே தமது மதத்தை, இனத்தை அழிக்கின்ற நோக்கில் செயற்பட்டார்கள் என்பது இவர்களுடைய குற்றச்சாட்டுக்களாக இருக்கின்றது. தம்மீது 200இற்கும் மேற்பட்ட கலவரங்கள் மேற்கொள்ளப்பட்டதாக சில ஆதாரங்களைக் காட்டி செய்திகள் வெளிவந்துள்ளன. ஆனால் வட-கிழக்கில் முஸ்லீம் ஊர்காவற்படை என்கிற பெயரில் தமிழினப் படுகொலைகளை அரசுடன் இணைந்து மேற்கொண்டனர். இதற்கான ஆதாரமாக கிழக்கில் தற்போதும் வசித்து வரும் முன்னாள் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஏகாம்பரம் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் அதிர்ச்சியளிக்கின்றன. அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் 40 இந்து ஆலயங்களும், 34 வீடுகளும், 16 கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன. என் கண்முன்னே இத்தகைய கொடுமைகளை அனுபவித்தவன் என்கிற ரீதியில் பேசுகின்றேன் என அவர் தினப்புயல் ஊடகத்திற்கு வழங்கிய விசேட நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

சில முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களது நிலத்தையும், வளங்களையும் ஆக்கிரமிக்கின்ற ரீதியில் செயற்பட்டார்கள். அரசின் புலனாய்வுக் கட்டமைப்புக்களில் நூற்றுக் கணக்கானோர் தற்போதும் பணிபுரிகின்றனர். இவர்கள் கடந்தகாலத்தைப் போன்று அரசின் ஒட்டுக்குழுக்களாக செயற்படலாம் என்ற யுக்தி தற்போது திசைமாறிவிட்டது. விடுதலைப்புலிகளை வைத்து அரசியல் நடத்திய முஸ்லீம் தரப்பு ஒரு கட்டத்தில் சர்வதேச பேச்சுவார்த்தை மேசைக்குச் சென்று திரும்பிய வரலாறும் இருக்கின்றது. இன்றைய கால சூழ்நிலையில் முஸ்லீம்களுடைய ஜனாசா எரிப்பு விவகாரத்தை வைத்து அரசாங்கம் தமது அரசியலைக்கொண்டுசெல்கின்றனர். அந்த செயற்பாடு தவறு என்று கூறி முஸ்லீம் தரப்பு தற்போது இதைவைத்து அரசியல் செய்கிறது. முஸ்லீம் நாடுகளில் முஸ்லீம் தீவிரவாதிகள் அப்பாவிப் பொதுமக்களை கொடூரமாக வெட்டிக்கொலை செய்கின்றபோது இந்த முஸ்லீம் அமைப்புக்கள் எங்கே போயினர்.

முள்ளிவாய்க்காலில் மாத்திரம் ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டபோது, செஞ்சோலையில் கொலை செய்யப்பட்டபோது, புதுக்குடியிருப்பு வலைஞர்மடத்தில் பாதுகாப்பு வலயம் என அறிவித்துவிட்டு குறித்த ஆலயத்தைத் தாக்கியபோது குரல் எழுப்பாதவர்கள் இவர்கள். அரசுடன் அன்று இணைந்திருந்தனர். தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்காக போராடிய புலிகளின் போராட்ட மௌனிப்பிற்கு பின்புலமாக நின்று செயற்பட்டவர்களில் முஸ்லீம் அரசியல்வாதிகளும் அடங்குகின்றனர். தற்போதைய சூழ்நிலையில் கொரோனா தொற்றினுடைய வேகம் இவ்வருட முடிவிற்குள் ஐம்பதாயிரத்தையும் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந் நிலையில் இறப்பின் விகிதமும் அதிகரித்துச் செல்கிறது.

முஸ்லீம் அரசியல் தலைமைகள் ஜனாசா விடயத்தை அரசியல் விவகாரமாக கையிலெடுத்து அணுகுவதன் காரணமாக தற்போதைய அரசாங்கம் இவ் விவகாரத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறது. கிழக்கு மாகாணத்தில் அதிகமாக முஸ்லீம் மக்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளில் திருகோணமலையில் 122, மட்டக்களப்பில் 131, அம்பாறையில் 24, கல்முனையில் 717 மொத்தமாக 940 பேர் வரை கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதில் 528 பேர் வீடு திரும்பியிருக்கும் நிலையில் 485 பேர் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இதில் 05 பேர் உயிரிழந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே இதுவரை உயிரிழந்தவர்களில் 100க்கு மேற்பட்டோர் முஸ்லீம்களாகவே இருக்கின்றார்கள். இந்நிலையில் அரசு பலரது உடலை எரித்துள்ளதுடன் இன்னும் சிலரது உடல்கள் குளிரூட்டப்பட்ட பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் நீதிமன்றம் குறித்த உடல்கள் தொடர்பாக எரிப்பதா அல்லது புதைப்பதா என்பது பற்றி முஸ்லீம் தமிழ் அரசியல் தலைமைகள் வடகிழக்கிலும் ஏனைய பகுதிகளிலும் போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். இதில் தமிழ்த் தரப்பு ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். உலகளாவிய ரீதியில் 40இற்கும் மேற்பட்ட முஸ்லீம் நாடுகள் இருக்கின்றது. குறிப்பாக வளைகுடாப் போரின் போது அப்பாவி முஸ்லீம் மக்கள் பல்லாயிரக்கணக்கான பேர் கொலை செய்யப்பட்டார்கள். பாகிஸ்தானில் மியன்மாரில் கொலை செய்யப்பட்டார்கள். ஈரான், ஈராக், சிரியா போன்ற நாடுகளில் கழுத்து வெட்டப்பட்டும் எரிகின்ற நெருப்பில் போடப்பட்டும் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்கள். குழிகள் வெட்டப்பட்டு ஒரே தடவையில் சுட்டப்பட்ட காட்சிகளும் வெளிவந்தன. கொலை செய்யப்படுகின்றபோது குறித்த நபர்கள் அல்லாஹ்வுக்கு எதிராக செயற்பட்டார்கள் என்று கூறி அல்லாஹ் அக்பர் அல்லாஹ் அக்பர் என்ற கோசத்துடன் அவர்களைக் கொன்றார்கள். அப்போது கூட இலங்கையில் இருக்கின்ற மனித நேயம் படைத்த தற்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள முஸ்லீம் தமிழ் தரப்பினர் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. காணொளிகளில் பார்த்தார்களே தவிர வேறொன்றும் நடக்கவில்லை. சதாம் ஹுசைன் சுன்னி முஸ்லீம்களை விஷ வாயு அடித்துக் கொலை செய்தார். இதை விடவும் மிகக் கேவலமான முறையில் ஆண்கள் பெண்கள் துண்டுதுண்டுகளாக வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். இவர்கள் அப்போதும் மௌனிகளாகவே இருந்தார்கள். இன்று முஸ்லீம்களின் ஒரு குழந்தை எரிக்கப்பட்டதையடுத்து மிகவும் ஆவேசத்துடன் இவர்கள் செயற்படுகின்ற விடயம் இவர்களின் அரசியல் தலைமைகள் வெளியிடும் அறிக்கைகள் நீதியமைச்சர் அலி சப்ரி அவர்களின் உணர்ச்சிவசப்பட்ட பேச்சுக்கள் இலங்கையில் ஒரு தீவிரவாத அமைப்பு உருவாகும் நிலைக்கு கொண்டுசெல்லப்படலாம்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் ஆளுநரான ஹிஸ்புல்லா அவர்கள் ஒரு அமைப்பை வைத்திருந்ததாகவும் அந்த அமைப்பின் ஊடாக ஆலயங்களை உடைத்ததும் பள்ளிகளை கட்டியதும் வியாபார நிறுவனங்களைக் கட்டியதாகவும் தானே இவற்றை முன்னின்று செய்ததாக காணொளியும் வெளியிட்டிருந்தார். இதற்குக் கூட அரசாங்கம் எந்தவொரு பதிலையும் கூறவில்லை. காரணம் அப்போது அரசாங்கத்தின் ஒரு பிடிக்குள் தான் முஸ்லீம் தரப்பு இருந்து வந்தது.

தொடர்ந்தும் ஒரு சில அணிகள் மாத்திரம் இந்த ஜனாசா எரிப்பு விவகாரத்தை எதிர்க்கின்றனர். அது மக்களால் மேற்கொள்ளப்பட்டால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. ஆனால் அது இன்றுஅரசியல்மயமாக்கப்பட்டுசிறுபான்மை மக்களை மீண்டும் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிக்கும் அளவிற்கு முஸ்லீம் அரசியல் தலைமைகள் கொண்டு செல்கிறது.

இவர்கள் கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வுக்கு உதவிகளை மேற்கொண்டிருந்தால் இவர்களை நம்பி தமிழ்த் தரப்பு களமிறங்க நியாயம் இருக்கிறது. தமிழ் மக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராகவே இவர்கள் செயற்பட்டவர்கள். இப்படிப்பட்டவர்களுடன் தமிழ் அரசியல்வாதிகள் இணைந்து வடகிழக்கில் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என பேசி வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட சிங்களத் தலைமையுடன் இணைந்து செயற்பட்ட முஸ்லீம்களை கொன்றொழித்த வரலாறு தான் இன்னமும் இருக்கிறது. இல்லையென்று மறுப்பதற்கில்லை. இராணுவ பொலிஸ் புலனாய்வுத் தரப்புக்களில் பணிபுரிந்த முஸ்லீம் தரப்பினரை அக்காலத்தில் ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் போன்ற கட்சிகளின் உதவியுடன் தான் விடுதலைப் புலிகள் சுட்டுக்கொன்றார்கள். இவர்கள் அதற்குத் துணைபோனார்கள். ஏன் அதற்குத் துணைபோனார்கள். குறித்த முஸ்லீம் தரப்பு தமிழினத்திற்கு துரோகத்தை விளைவிக்கின்றதுஎன்கிறகாரணத்தினால் தான் அன்று சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

அரசியல் நிலைமைகள் என்பது பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றங்களைக் கொண்டுவரக் கூடியது. அதுபோன்று தான் தற்போதைய காலகட்டத்தில் டட்லி சேனாநாயக்கா தொடக்கம் கோட்டபாய வரை பல்வேறான மாற்றங்கள் அரசியலில் நடந்து முடிந்துள்ளது. குண்டுத்தாக்குதலகளில் ஈடுபட்ட பலர் கோட்டபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது இராணுவத் தரப்புடன் தொடர்பில் இருந்தவர்கள் என்பது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. தற்போதும் அதற்குப் பரிகாரம் தேடும் வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மீண்டும் ஒரு தீவிரவாதத் தாக்குதல் இந்நாட்டில் இடம்பெறமாட்டாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. சஹ்ரானின் தாக்குதலிலன் கையுடன் தேர்தலை நடத்திமுடித்த அரசு பாரிய வெற்றியை ஈட்டியது. சஹ்ரானின் குண்டுத்தாக்குதலை அழித்தொழிக்க வேண்மாக இருந்தால் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கின்ற அரசு வெற்றி பெற வேண்டும் என்பது பௌத்த இனவாத தேரர்களின் பிரச்சாரமாகும்.

குறித்த தேர்தல் காலத்தில் பௌத்த துறவிகளை தமக்கு ஆதரவாக பயன்படுத்திய கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வெற்றிவாகை சூடினார். ஆயுத ரீதியில் தமிழீழ விடுதலைப்புலிகளை இலங்கையரசு தோற்கடிக்க முடியாது என்கிற காரணத்தினால் சர்வதேச நாடுகளின் உதவியை நாடி குறிப்பாக இந்தியா,பாகிஸ்தான்,சீனா இவர்களின் தலையீட்டுடன் தமிழர் தாயகத்திற்கான போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளின் அரசியல் செயற்பாடுகளினால் நாடுகடந்த தமிழீழ அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்



செயற்பட்டு வந்தது. தமது அதிகாரத்தை பயன்படுத்தி வடக்கிலும்,கிழக்கிலும் தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களை விளைவிக்கும் இராஜத்திர நோக்குடன் தமிழ்த் தரப்புக்களையே களமிறக்கியது அரசாங்கம். பலரும் விலை போய் துணைபோயினர்.

ஆகவே சிறுபான்மை மக்களுடைய தீர்வுத்திட்டங்கள் எதுவாக இருப்பினும் அவற்றை நடைமுறைப்படுத்துவது இந்த பெரும்பான்மை அரசியல் தலைமைகளினால் சிக்கல்கள் உருவாகியிருக்கிறது. இதனை அவர்கள் இலாபகரமாக பயன்படுத்துவதற்காகவே தற்போது ஜனாசா விவகாரத்தையும் அவர்கள் கையிலெடுத்திருக்கிறார்கள். மலையக தலைமைகளை பொறுத்தவரை ஆயிரம் ரூபாய் சம்பள பிரச்சினை. வடகிழக்கு தமிழ் மக்களை பொறுத்தவரை அரசியல் கைதிகள் விவகாரம், பயங்கரவாத தடைச்சட்டம், காணாமல் போனோர் விவகாரம், காணி விடுவிப்பு போன்றவை. முஸ்லீம் தரப்பை பொறுத்தவரை தனி அலகு, அரபிக் கல்லூரி, தீவிரவாதிகளுடனான தொடர்புகள், தற்போதைய ஜனாசா எரிப்பு விவகாரம். இவற்றை வைத்துத்தான் தற்போது தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தமது அரசியலை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் இடைக்கால நிர்வாகமே வழங்கப்பட்டிருந்தது. ஆனால் ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடிய விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகளாக முத்திரை குத்தியது இலங்கை அரசு. இலங்கையில் வாழ்கின்ற ஒட்டுமொத்த சிறுபான்மை மக்களையும் தமது பிடிக்குள் வைத்திருக்க முடியும் என்பது அரசின் நிலைப்பாடு. ஆனால் ஆயுதப்போராட்டத்தின் தன்மை என்பது வேறுபட்டதொன்று. குறித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுமாகவிருந்தால் தற்போது அரசு செய்தவற்றை கூட அவர்கள் மறந்து அவர்களுக்கு ஆதரவாக செயற்டுகின்ற நிலைமைகள் உருவாகும். அவ்வாறே கடந்த காலங்களிலும் இந்த முஸ்லீம் தரப்பு செயற்பட்டது. இவர்கள் நம்பி அரசியல் களத்தில் இவர்களுக்கு ஆதரவாக செயறப்படும் தமிழ் தரப்பு செயற்படுவது இன்றைய அரசியல் கால நீரோட்டத்தில் இன்றியமையாததொன்று.

-இரணியன்-

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனாவுடன் பிறக்கப்போகும் புதுவருடம்

உலக நாடுகளை இன்று அச்சுறுத்தலுக் குள்ளாக்கிக் கொண்டிருக்கும் இந்த கொரோனா வைரஸினால் 79,062,802 பேர் உலகளவில் பாதிக்கப்பட்டிருப்பதுடன், 1,751,311பேர் உலகளவில் இதுவரை உயிரிழந்துள்ளனர். இலங்கையைப் பொறுத்தவரையில் 40,842 இதுவரை பாதிக்கப்பட்டுள்ளதுடன், 7,954 பேர் சிகிச்சையில் இருப்பதுடன், 32,701 பேர் குணமடைந்திருப்பதுடன், 187 இதுவரை உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் களியாட்ட விருந்துகள், சுற்றுலா மையங்கள், மத வழிபாட்டுத்தலங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், கொரோனா தடுப்புச் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலாவது கொரோனா அலை யின் போது இறப்பு எண்ணிக்கை மிகவும் குறை வாகப் பதிவாகியிருந்தது. ஆனால் தற்போது 187 பேரை எட்டியிருப்பது என்பது இலங்கையின் சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் இறப்பு எண்ணிக்கை விகிதம் அதிகமாகவும், தொற்றுக்குள்ளாகும் நபர்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்துச்செல்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

நாடளாவிய ரீதியிலான முடக்கம் என்பது நாட்டில் பொருளாதார ரீதியாக தாக்கத்தைக் கொடுக்கும். இன்றைய சூழ்நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்படும். இலங்கை 65,610 சதுரப் பரப்பளவைக் கொண்டுள்ளது. கொரோனா வின் வீரியத்தை குறைக்கவேண்டுமாக இருந்தால் நாட்டின் சர்வதேச விமான நிலையங்களை மூடவேண்டும். வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகளவிலானதாக காணப்படுவதுடன், இலங்கைக்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் துறை யாக சுற்றுலாத்துறையே காணப்படுகிறது. ஆகவே அரசு வருமானத்தை எதிர்பார்த்து விமான நிலையங்களை புதுவருடத்தில் திறக்கு மாகவிருந்தால் வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு வெளியிலே அனுப்பப்பட்டாலும் 14 நாட்களுக்குப் பின்னரும் இவ்வைரசால் பாதிக்கப்பட்டு இறந்த மக்கள் இருக்கிறார்கள். இவ் சுற்றுலாப் பயணிகளின் மூலமாக கொரோனா வைரஸ் இலங்கைக்குள் பரவும் வேகம் இன்னுமின்னும் அதிகரிக்கும். ஆகவே இவர்களைக்கட்டுப்படுத்துவதேதற்போதைக்கு உகந்தது. மாவட்ட ரீதியான முடக்கங்களை மேற்கொள்வதன் ஊடாக கொரோனா வைரசின் வேகத்தை, இறப்பு விகிதத்தை கட்டுப்படுத்த முடியும். இந்த இரண்டையும் செய்ய அரசு தயங்குகிறது.

ஆரம்பத்தில் மாவட்ட-கிராம, விமான நிலையங்கள் முடக்கம், ஊரடங்குச்சட்டம் அமுல் ஊடாக சரியான பாதுகாப்பை அரசு வழங்கியதனால் தொற்றுக்குள்ளாகும் நபர்கள் மற்றும் உயிரிழப்புக்கள் குறை வாக இருந்தது. எது எவ்வாறாகவிருப்பினும் மலரவிருக்கின்ற புத்தாண்டு பெரும் சோகத்துடன் மலரப்போகின்றது என்பதுதான் ஒரு அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. மனி தனால் உருவாக்கப்பட்ட குறித்த வைரஸ் (சீனா) உலகளாவிய ரீதியில் இலட்சக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்துள்ளது. இயற்கையின் சீற்றமும் மறுபுறத்தில் விட்டபாடில்லை. எனினும் மிகவிரைவில் மலரும் புதுவருடம் சாந்தி, சமாதானம், சுபீட்சமாக, ஆரோக்கியமாக மாற்றம் பெறவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்




இந்த நேரத்தில் பதுங்கி உருமறைத்துக்கொள்ள வேண்டும். அவன் மீண்டும் சுடத்தொடங்கியதும் அவனை நெருங்கத் தொடங்க வேண்டும். எதிரியுடனான சகல எதிர்பாராத முட்டுப்படுதல்களின் போதும் அவனது படைகளை வெளிப்படுத்த முயற்சி செய். அத்துடன் ஒன்றில் எதிரியை அழிப்பதற்காகச் சமர் மேற்கொள் அல்லது நகர்வுத் திசையை மாற்றி வேகமாகப் பின்வாங்கு. எதிரியிடமிருந்து விலகிச் சென்றபின் மாத்திரமே குறித்த இலக்கை நோக்கியநகர்வுத்திசையைத்தெரிவுசெய். எதிரியின் பின்புலத்திலுள்ள வீதியில் யாராவதொரு பிரதேசவாசியைச் சந் தித்தால் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்துக்கொள். அவ்வாறான மனிதனை கெரில்லாக்களின் வேவு அணி சந்தித்திருந்தால் அம்மனிதன் கெரில்லாக்களின் பிரதான படைகளை இன்னமும் கவனிக்கவில்லையென்றால் அவன் சகல கெரில்லாக்களையும் காணாதவாறும் அவர்களின் எண்ணிக்கையை அறியாதவாறும் நகர்வுத் திசையைத் தெரிந்து கொள்ளாதவாறும் அவனை ஒரு பக்கத்திற்கு வேகமாகக் கொண்டுசெல்ல வேண்டும். வெளியில் தெரியாதவாறு பிரதான கெரில்லாப் படைகள் கடந்து செல்லும்வரை காத்திருந்து கைது செய்யப்பட்டவனை வேவு அணி விசாரித்துவிட்டு அவனை விட்டுவிடும். சந்தித்த மனிதனால் பிரதான கெரில்லாப் படைகளை நேரடியாக அவதானிக்க முடிந்ததென்றால் அவனைக் கைது செய்ய வேண்டும். கைது செய்யப்பட்டவனைச் சோதனை செய்து விசாரணைக்குட்படுத்த வேண்டும். அவன் பாசிசக் காவற் படையைச் சேர்ந்தவனா அல்லது கைப்பற்றப்பட்ட பிரதேசத்திலிருக்கின்ற ஹிட்லரின் ஆட்களால் உருவாக்கப்பட்ட பிரதேச நிர்வாகத்தைச் சேர்ந்தவனா என்பதை அறிய வேண்டும். அவனிடம் எதிரியைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் முயற்சிக்க வேண்டும். தமது உண்மையான நகர்வுத் திசையை மறைப்பதற்காகப் படைப்பிரிவு வேறுபக்கத்திற்குத் திரும்பிச் செல்கின்றது. படைப்பிரிவுடன் சேர்ந்து கைது செய்யப்பட்டவனும் சில கிலோமீற்றர் தொலைவிற்குக் கொண்டு செல்லப்படுவான். பின்னர் படைப்பிரிவு கண்பார்வையிலிருந்து மறையும் வரையும் போதுமான அளவு தூரத்திற்குச் செல்லும் வரையும் இரண்டு காவலர்களின் கண்காணிப்பில் கைதி விடப்படுவான். இதன் பின்னர் கைதியை விட்டுவிடலாம். ஆனால் படைப்பிரிவு மீண்டும் நகர்வுத் திசையை மாற்றி அதற்கு வழங்கப்பட்ட இடத்திற்கு நகரும். எதிரியின் பின்புலத்திலிருந்து முன்னணி வரிசையைக் கடந்து மீளத் தமது இடத்திற்கு வருகின்றபோதும் செம்படைப் பிரிவுகள் இவ்விதி முறைகளையே கடைப்பிடிக்கின்றன. அவதானமான வேவை மறந்துபோகக்கூடாது. சரியான பாதை யையும் கடக்கவேண்டிய இடத்தையும் கண்டுகொள் செம்படைப் பிரிவுகளுக்கு நடக்கவிருக்கின்ற கடப்பைப்பற்றித் தெரியப்படுத்துதல். முன்னணி வரிசையிலிருந்து 10 - 12 கி.மீ தொலைவிலுள்ள மறைப்பான இடங்களிலொன்றிலேயே ஆரம்பத்தில் தங்குவது சிறந்தது. அதாவது எதிரி யின் சமர்க்கட்டமைப்புகள் இருக்கின்ற எல்லைக்கப்பாலாகும். இங்கே கெரில்லாக்கள் ஓய்வெடுக்கவும் முன்னணி வரிசையைக் கடப்பதற்குத் தயார்ப்படுத்தவும் வேண்டும். பின்னர் அங்கிருந்து தங்களுடைய ஆட்களிடம் செல்வதற்கான கடைசி நகர்வை மேற்கொள்ளவேண்டும். எதிரியின் பின்புலத்திலிருந்து முன்னணி வரிசையைக் கடந்துவரும்போது செம்படைகளுக்குத் தேவையான விடயங்கள் பற்றி வேவு பார்க்க மறக்காதே. நீ மிகவும் புதிய தகவல்களைக் கொண்டு வருவாய் என்பதை நினைவிற்கொள்.

**தங்குதல்**

கடினமான கடப்பிற்குப் பின்னரும் சமர் நடவடிக்கைகளுக்குப் பின்னரும் படைபலத்தைப் புனருத்தாரணம் செய்யும் பொருட்டும் விழுப்புண்ணடைந்த, நோய்க்குள்ளான தோழர்களுக்கு அவசிய சிகிச்சையளிக்கும் பொருட்டும் கெரில்லாக்கள் இடமொன்றில் தங்குகின்றனர். ஆண்டின் சகல காலப்பகுதியிலும் மிகத் தரமானதும் நம்பகரமானதுமான காப்பிடமாகப் பெரிய காடுகளே விளங்குகின்றன. இங்கே உரு மறைக்கப்பட்ட நிலவறைகளையும் குடிசைகளையும் உருவாக்குவது மிகவும் வசதியாகும். பாசிஸ்டுகள் காட்டிற்குள் செல்வதைத் தவிர்க்கின்றார்கள். தங்களது தளத்தைக் கெரில்லாக்கள் நன்றாக உருமறைக்கவேண்டும். தங்கியிருக்கின்ற இடத்தை மாத்திரம் உருமறைப்பதோடன்றி, படைப்பிரிவை இனங்காட்டுகின்ற தடங்களையும் (குறிப்பாக மழைக்காலங்களில்) உருமறைக்க வேண்டும். தடங்களை உருமறைக்கின்ற பிரதான வழி-வகைகளைக் கடைப்பிடி 1: தடம் அழிக்கப்படுகின்ற (மூடப்படுகின்ற) மழை (பனி) பொழிகின்ற நேரங்களில் காட்டிற்குள் நுழைய அங்கிருந்து வெளி யேற முயற்சிசெய். 2: தடம் பதியப்படாத கடின தரையிலும் கற்களிலும் கால்வைத்து நடக்க முயற்சிசெய். 3: தோழனின் கால் தடத்தில் தடம்பதித்து நட.

உணவு தயாரிப்பதற்கும் ஆடைகள் மற்றும் காலணிகளை உலர்த்துவதற்கும் தீக்கணப்பு அவசியமானதாக இருக்கின்றது. குறிப்பாக ஓய்வெடுக்கின்ற படைப் பிரிவிற்கான காப்பு நம்பகரமாக ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கவேண்டும். எதிரியின் திடீர்த் தாக்குதலிற்குப் பிரதான படைபலம் ஆளாகாமல் காக்கும் வகை யில், கெரில்லாக்களின் காவலணி கணிசமானளவு தூரத்திற்குச் செல்கின்றது. இங்கு சகலதும் பிரதேசத் தரையமைப்பையும் பிற காரணிகளை யும் பொறுத்ததாகும். இதன்போது, ஒரே மாதிரியான செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது அடர்த்தியான வளரிகளைக் கொண்ட நகரக் கடினமான பிரதேசங்களில் ஒன்று மாத்திரமன்றி இரண்டு அல்லது அதற்குக் கூடுதலான பாதுகாப்பு வரிசைகள் தேவைப்படலாம். காட்டில் தங்கியிருக்கும் போது நேரடியான தற்காப்பைத் தவிர கண்காணிப்பை மேற்கொள்வதற்கான தனியான கண்காணிப்பாளர்களைக் காட்டின் கரையோரத்திற்கும் எதிரி வரக்கூடிய சாத்தியம் இருக்கின்ற பகுதிகளுக்கும்அனுப்பவேண்டும். பகலில் இவ்வாறான கண்காணிப்பாளர்கள் நன்றாக அவதானிக்கும் வகையில் மரங்களில் ஏறிப் பதுங்கியிருப்பார்கள். எதிரி வரும்போது அதனைப் படைப்பிரிவிற்குத் தெரியப்படுத்தி எச்சரிப்பதற்கும் அவனது ஆளணி எண்ணிக்கை நகர்வுத் திசை போன்றவற்றைத் தெரிவிப்பதற்குமான சைகைகளை அவசியம் உருவாக்கியிருக்க வேண்டும். சைகை வழங்கல் நம்பகரமானதாகவும் வேக மானதாகவும் இருக்கவேண்டும். நிலவறையில் தங்கியிருக்கின்ற போது அதன் இரண்டிற்குக் குறைவற்ற பாதை களை வெவ்வேறு திசைகளில் அவசியம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். போதியளவு கால அவ காசம் இருக்குமானால் நிலவறை களுக்கிடையில் நிலக்கீழ் பாதை உருவாக்கப்பட்டு அவை ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டிருக்க வேண்டும். நிலவறைகளுக்கருகில் மூடிய காப்பைக்கொண்ட பதுங்கு குழிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். முகாமுக்கான பாதை யில் எதிரிக் காலாட் படையையும் ராங்கிகளையும் தடைப்படுத்துகின்ற சாதாரண தடையமைப்புகளும் உருவாக்கப்படவேண்டும். பிரதான பாதைகளில் கண்ணிகள் வைக்கப்படவும் வேண்டும். இந்நிலையில் பாசிஸ்டுகள் கண்ணியில் அகப்பட்டுச் சிதறுவதோடு மாத்திரமன்றி கண்ணிவெடிச் சத்தம் கெரில்லாக்களுக்கான சைகையாகவும் விளங்கும். ஒழுங்குவிதிப்படி கெரில்லாக்கள் மக்கள் வாழ்விடப் பகுதிகளில் தங்குவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். பின்வரும் நிலைமைகளைக் கொண்டிருக்கின்ற மக்கள் வாழ்விடங்களில் மாத்திரமே தங்கலாம். அருகில் எதிரிப் படைகளைக் கொண்டிருக்காத குறுகியநேரத்தில் எதிரி வந்துசேர முடியாத மக்கள் வாழ்விடங்களே அவையாகும். ஆனால் சகல சூழ்நிலைகளிலும் அவதானமான வேவின் பின் மாத்திரமே இதனை மேற்கொள்ளலாம். கெரில்லாக்கள் தங்குகின்ற மக்கள் வாழ்விடத்திலும் அதற்கு வருகின்ற சகல பாதைகளிலும் பலப்படுத்தப்பட்ட தற்காப்புக்களை அவசியம் ஏற்படுத்தவேண்டும்.

தொடர்வான்...

**நெற்றிப்பொறியன்**

# மேய்ச்சல் தரை விவகாரமும், அரசின் அசமந்தப் போக்கும்

இலங்கை ஓர் விவசாய நாடாக காணப்பட்டு வந்த நிலையில் 2000 ஆம் ஆண்டுக்கு பின்னர் கைத்தொழில் துறையிலும் அது சமாந்திரமாக பயணிக்கத் தொடங்கிய நிலையில் ஏற்றுமதித் துறையில் அதிகமான பங்கை விவசாயம் தான் தன்னகத்தே கொண்டுள்ளது. அது பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையான தேயிலை, கோப்பி மற்றும் வாசனைதிரவியங்கள் மூலம் பெருமளவிலான அந்நிய செலாவணியை இலங்கை பெற்று வருகின்றது. இந்நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இன வன்முறைகள் பெரும் போராக மாறி கடந்த 30 ஆண்டுகாலமாக இடம்பெற்று வந்த நிலையில் இவ் யுத்தத்தால் வடகிழக்கு வாழ் தமிழ் மக்கள் பெருமளவிலான உயிர்களையும் சொத்துக்களையும் இந்த கோர யுத்தத்தால் இழந்துள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் இனத்துக்காக போராடிய விடுதலைப்புலிகள் அமைப்பையும் அப்பாவி பொது மக்களையும் அவர்களது சொத்துக்களையும் உலக வல்லரசுகளின் உதவியுடன் முள்ளிவாய்க்கால் மண்ணில் புதைக்கப்பட்டது. யுத்தம் முடிவுற்றதன் பின்னர் வடகிழக்கு வாழ் மக்கள் தாங்கள் இழந்த பொருளாதார கட்டமைப்பை மீள உருவாக்க பலவழிகளிலும் போராடி வருகின்றனர்.

வடகிழக்கு வாழ் மக்கள் பெரும் பாலானோர் விவசாயத்தையும் அதனுடன் இணைந்த கால்நடை வளர்ப்பையும் மேற்கொண்டு வரும் நிலையில் விவசாயத்துடன் ஒன்றிப்பிணைந்தது தான் கால்நடை வளர்ப்பு. வடக்கு மாவட்டங்களில் யாழ் மாவட்டத்தில் நெல் செய்கையானது குறைந்தளவில் தான் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு நெல்லுக்குரிய மண்வளம் பெரியளவில் இல்லாமை அத்துடன் குளங்கள் பெரியளவில் அங்கு இல்லாமையினால் நெல் உற்பத்தியை தவிர ஏனைய விவசாய நடவடிக்கைகளில் அங்கு ஈடுபடுகின்றார்கள். ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற மாவட்டங்களில் நெல் பயிரிடல் மிக அதிகமாக காணப்படுகின்றது.

இலங்கையில் சுதந்திரத்திற்கு பின் வந்த ஆட்சியாளர்கள் எல்லோரும் விவசாயத்துக்கு முன்னுரிமை அளித்து வந்த நிலையில் தற்பொழுதுள்ள அரசாங்கம் விவசாயத்துக்கு அதி முன்னுரிமை வழங்கி வருகின்றது. கோர யுத்தம் இடம்பெற்ற காலத்தில் நெல் பயிர்ச்செய்கைக்கு வடகிழக்கு பகுதிகளில் பெரும் நெருக்கடி நிலை இருந்து வந்தது. இராணுவ அடக்குமுறைகள், இராணுவ ஆக்கிரமிப்பு, பல வயல் நிலங்கள் இராணுவப் பாதுகாப்புக்காக கையகப்படுத்தப்பட்டு இருந்தது. அத்துடன் உர வகைகள் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டமை போன்ற காரணங்களாலும் மற்றும் எல்லைப்புற சிங்கள குடியேற்றங்களாலும் வடகிழக்கு பகுதிகளில் விவசாயிகள் நெருக்கடியை சந்தித்தனர். யுத்தம் முடிவுற்றவுடன் விவசாய நடவடிக்கைகள் முழு வீச்சுடன் இடம்பெற்று வருகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

விவசாயம் செய்யாமல் இருந்த மேற்படி மாவட்டங்களில் உள்ள வயல் காணிகளில் நெல் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டு வேகமாக முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன் உரமானியங்கள் வழங்கப்படுகின்றது. சிறந்த விதை நெல்கள் வழங்கப்படுகின்றது. அத்துடன் நீண்டகாலமாக இராணுவப் பாதுகாப்பிற்காக நெற் செய்கைக்குத் தடுக்கப்பட்டிருந்த வயல்கள் மீளவும் உரியவர்களிடம் வழங்கப்பட்டு நெல் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விவசாயிகளின் நெல்லை அரசே நல்ல விலையில் எடுத்துக் கொள்கின்றது. இருந்தபொழுதிலும் நெல் செய்கை செய்யும் விவசாயிகளுக்கு பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. அவர்கள் நெல் செய்கையில் ஈடுபடும் பொழுது சில நெருக்கடிகளை சந்திக்கின்றனர். பெரும்பாலான விவசாயிகள் மழையை நம்பியே நெல் உற்பத்தியை மேற்கொள்கின்றனர்.

இதில் மழைவீழ்ச்சி போதாமை, சில காலங்களில் மழை முற்றாக இல்லாமல் போதல், அடுத்து நோய்த்தாக்கங்கள், எல்லைக் கிராமங்களில் யானை மற்றும் கால்நடைகளின் தாக்கங்கள், விவசாய நெல் வயல்களில் கால்நடைகள் புகுந்து சேதத்தை விளைவித்தல், நெல் பயிரிடல் தொடக்கம் அறுவடை வரை தற்பொழுது செலவுகள் அதிகரித்துச் செல்லல் போன்ற பல பிரச்சினைகளை நெல் செய்கையாளர்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இது விவசாயிகளின் நிலை மறுபக்கம், வடகிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் சில பகுதியினர் கால்நடை வளர்ப்பினை மேற்கொண்டு வருகின்றனர். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவட்டங்களின் கால்நடைகள் பல இறுதி யுத்தத்தில் அழிவடைந்த நிலையில் மீண்டும் வங்கிகளில் கால்நடை வளர்ப்புக்கான கடனைப் பெற்று கால்நடைகளை வாங்கி வளர்த்து வருகின்றனர். அதிகமாக பண்ணையாளர்கள் பசு மாடுகளை வாங்கி வளர்த்து வருகின்றனர். அதிகமான பண்ணையாளர்கள் பசு மாடுகளை வளர்த்து பால் உற்பத்தியில் ஈடுபட்டு அதை சந்தைப்படுத்தி தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர்.

பாலினை சந்தைப்படுத்த பால் சாலைகள் மாவட்டங்கள், கிராமங்கள் தோறும் ஆரம்பிக்கப்பட்டு பால் கொள்வனவில் ஈடுபடுகின்றனர். பால்சாலைகள் பாலிற்கான சரியானதோர் விலை அறிவித்து பாலினை பெற்றுக்கொள்கின்றன. இந்நிலையில் கால் நடை வளர்ப்புகள் வடகிழக்கு மாவட்டங்களில் முன் எப்போதும் இல்லாதஅளவுக்கு அதிகரிப்புடன் மக்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். அரசும் கால் நடை வளர்ப்புக்கு உரிய உதவிகள் வழங்கி வருகின்றது. மாவட்டங்களில் கால்நடை வைத்தியசாலைகள் அரசினால் உருவாக்கப்பட்டுள்ளதுடன் நல் இன பசுமாடுகள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இங்கு அவற்றை கொண்டு நல்லின பசுமாடுகளை உருவாக்கி அதனை மக்களுக்கு குறைந்த விலையில் வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றது.



இந்நிலையில் தற்பொழுது இந்த கால்நடை வளர்ப்புக்களிலும் பல பிரச்சினைகளை சிறு பண்ணையாளர்கள் தொடக்கம் பெரும் பண்ணையாளர்கள் வரை சந்தித்து வருகின்றனர். அது என்னவெனில் மேய்ச்சல் தரை பிரச்சினையானது தான் இங்கு முக்கியமாக பார்க்கப்படுகின்றது. குறிப்பாக மாவட்ட ரீதியாக பார்க்கும் பொழுது முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 75 ஆயிரம் கால்நடைகள் உள்ளதாகவும் அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில் 90 ஆயிரம் கால் நடைகள் உள்ளதாகவும் கிழக்கு மாகாணங்களிலும் 1 இலட்சத்துக்கு அதிகமான கால்நடைகள் உள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கும் நிலையில், கால் நடைகளுக்கு உரிய மேய்ச்சல் தரைகள் இல்லாமையால் பல பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். தற்பொழுது விதைப்பு காலமானதால் வயல்கள் அனைத்தும் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் யானைகளின் தாக்கம் உள்ள பகுதிகளில் மின்சார வேலிகள் அமைக்கப்பட்டு உள்ளது.

இதனால் பசுமாடுகள் பல இவ்வாறான மின்சார வேலிகளில் சிக்கி உயிரிழந்து வருகின்றன. அத்துடன் நெல்வயல்களுக்குள் இவ்வாறு பசுமாடுகள் உள்நுழைவதால் விவசாயிகள் அப்பசு மாடுகளை தாக்கி காயப்படுத்தும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. இதனால் விவசாயிகளுக்கும் கால்நடை வளர்ப்போர் பண்ணையாளர்களுக்குமிடையில் சண்டைகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் கால்நடைகள் வீதிகளில் நிற்பதால் விபத்துக்கள் ஏற்படுத்துவதாக கூறி நகர சபையினர் கால்நடைகளை பிடித்து சென்று தமது நகரசபைகளில் கட்டி வைத்துள்ளனர். அதனைமீட்கவரும்பண்ணையாளர்களிடம் அபராதத் தொகை அறவிடப்படுகின்றது. இன்னும் சில பண்ணையாளர்களின் பசுமாடுகள் திருட்டு கும்பல்களால் களவாடப்பட்டு இறைச்சியாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு கால்நடை வளர்ப்பாளர்களின் நிலையும் மிகவும் மோசமாக காணப்படுகின்றது. இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் மேய்ச்சல் தரை காணி அபகரிப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக மயிலத்தமடு, மாதவனை, வவுணதீவு போன்ற மேய்ச்சல் தரை காணிகள் இவ்வாறு அபகரிக்கப்பட்டு வருகின்றது. இக்காணி அபகரிப்பினை தடுப்பதற்கு அப்பகுதி பண்ணையாளர்கள் முதல் பொது மக்கள் வரை போராடி வருகின்றனர். இவ்வாறு தமிழ் மக்களின் வாழ்வாதார செயல்பாடுகள் அனைத்தும் அபகரிக்கப்பட்டு தமிழ் மக்களை நிர்க்கதியாக்கும் செயற்பாட்டில் இவ் அரசு ஈடுபடுவது போல தோன்றுகின்றது.

வடகிழக்கு தமிழ் மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்த போராடி வரும் நிலையில் அரசானது அதற்கு உறுதுணையாக இருந்து அதனை மேம்படுத்த வழிசமைக்க வேண்டும். தமிழ்த் தேசியம் பேசும் எமது தமிழ் தலைமைகள் இது தொடர்பாக குறிப்பாக இந்த கால்நடை பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை உருவாக்கத்துக்கு முயற்சியினை மேற்கொள்ளவேண்டும். அத்துடன் அரசுக்கு தங்களால் முடிந்தளவு இருக்கும் மேய்ச்சல் தரை காணிகள் அபகரிப்பை தடுத்து நிறுத்தி கால்நடை பண்ணையாளர்களை காப்பாற்ற முன்வரவேண்டும் என்பதே சகலரின் கோரிக்கையாகும். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் விவசாய நிலங்களில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி என்று கூறி வயல்நிலங்களில் தங்கள் ஆராய்ச்சியை மேற்கொண்டு விவசாயிகளின் நெல் செய்கை வளத்தை தடுக்கும் செயல்பாட்டை உடனடியாக நிறுத்துவதற்கும் அரசிடம் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்றும் அம்மாகாண விவசாயிகள் வேண்டி நிற்கின்றனர். அரசு வெறுமனவே விவசாயத்தை ஊக்கப்படுத்துகின்றோம் எனக்கூறிக் கொண்டு வடகிழக்கில் விவசாயக் காணிகளில் இவ்வாறான அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுவதாவது அப்பட்டமாக தமிழ் இனத்தின் வளங்களை அழிக்கும் செயல்பாடேயொழிய வேறொன்றும் இல்லை. ஒரே நாடு ஒரே மக்கள் எனக்கூறிக்கொண்டு இவ்வாறு ஓரவஞ்சகமாக செயல்படுவதானது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

எனவே அரசு உடனடியாக இந்த மேய்ச்சல் நிலவிவகாரத்தை ஆராய்ந்து அதற்குசரியான தீர்வை வழங்க வேண்டும் என்பதுடன் தமிழ் பேசும் மக்களின் வாழ்வாதார மூலங்களான விவசாயத்தையும், கால்நடை வளர்ப்புகளையும் மேம்படுத்த வழிவகை செய்யவேண்டும் என்பதே வட-கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

**தாயகத்தான்**



# தமிழ் கட்சிகளின் பிளவும், அரச புலனாய்வின் காய் நகர்த்தல்களும்

இலங்கையில் சிறுபான்மை இனத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டமானது 1970களின் பிற்பகுதிகளில் ஆரம்பமானது. இவ் ஆயுதப் போராட்டத்தை அழித்தொழிக்க இலங்கை பேரினவாத சிந்தனையும் பௌத்த மேலாதிக்க சிந்தனையுடைய தென்னிலங்கை அரசியல் தலைமைகள் மிக மோசமான இராணுவ அடக்குமுறையை பிரயோகித்தது. இதற்கு உறுதுணையாக பயங்கரவாத தடைச்சட்டத்தை பிரயோகித்தது. எண்ணிலடங்கா அப்பாவி தமிழ் இளைஞர்களை இச் சட்டம் மூலம் கைது செய்து சிறையிலடைத்தது மட்டுமல்லாமல் சுட்டும் தள்ளியது. இதனை பயங்கரவாதத்தை ஒடுக்குவதாக அதற்கு ஓர் பெயரையும் சூட்டியது.

அக்கால கட்டங்களில் சிறுபான்மை தமிழர்களின் தேசியப் போராட்டத்துக்கு இன்னொரு சிறுபான்மை இனமான மொழியால் ஒன்றிணைந்து மதத்தால் வேறுபட்டு இருந்த முஸ்லிம் இளைஞர்களும் தமிழர்களின் ஆயுதப் போராட்ட அமைப்பு களுடன் இணைந்து போராடினர். இதனை ஏற்றுக்கொள்ள முடியாத பேரினவாதம் தனது புலனாய்வு செயல்பாட்டின் மூலம் தமிழ் - முஸ்லிம்களுக்கிடையே மோதலை உருவாக்கி அவர்களை பிரித்து தனது கோரமுகத்தைக் காட்டியது. அதற்கு அக்காலத்தில் இஸ்ரேல் புலனாய்வு அமைப்பான மொசாட் அமைப்பு இதற்கு பெரும் உதவி புரிந்தது. இந்த இஸ்ரேல் மொசாட் புலனாய்வு அமைப்பானது இன்று வரை உலகில் மிகப்பெரும் வலையமைப்பும் முதல் தர புலனாய்வு அமைப்பாகவும் விளங்குகின்றது.

இந்த மொசாட் அமைப்பின் பயிற்சியை பெற்ற இலங்கை அரசின் இராணுவத்தினர் மற்றும் இலங்கை அரசின் அப்பொழுதிருந்த முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் இவ் மொசாட் அமைப்பின் பயிற்சியை பெற்ற இராணுவத்தின் உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் - தமிழ் மக்களுக்கிடையே மோதலை உருவாக்கி இரு இனங்களையும் பிரித்ததில் வெற்றி பெற்றார். அதன் பின் ஒற்றுமையுடனும் ஒரே கொள்கை அடிப்படையில் தமிழ் இனத்தின் விடிவுக்காகப் போராட புறப்பட்ட 5 தமிழ் இயக்கங்களான விடுதலைப்புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம்(ரெலோ), மக்கள் விடுதலைக்கழகம் (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்), ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) போன்ற 5 இயக்க அமைப்புக்களையும் பிரித்தாளும் கைங்கரியத்தில் ஈடுபட்டு அதிலும் வெற்றியடைந்தது.

அதில் சில இயக்க அமைப்புகள் இந்திய புலனாய்வு அமைப்பான றோவின் சதி வலையில் சிக்கி இந்திய அரசின் பிராந்திய சுயநலனுக்காக எமது இனத்தின் ஆயுதப் போராட்டத்தைக் காட்டி கொடுத்து இந்திய மத்திய அரசின் காலடியில் விழுந்தது. அதில் ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் ரெலோ அமைப்பானது இவ்வாறு இந்திய அரசின் காலடியில் விழுந்தது. புளொட் அமைப்பானது எந்த இனவாத அரசிடம் இருந்து விடுதலை வேண்டி போராடி னோமோ அதே அரசின் காலடியில் வீழ்ந்து தமிழ் இன அழிப்பை மேற்கொண்டது. விடுதலைப்புலிகள் மாத்திரம் தமிழ் மக்களின் விடிவுக்கான போரில் இறுதிவரை வழி விலகாமல் பயணித்தனர். ஆனால் அந்த அமைப்பின் கட்டமைப்பை இந்தியாவின் புலனாய்வு அமைப்பான றோ முதல் இஸ்ரேலின் மொசாட் அத்துடன் இலங்கை அரசின் புலனாய்வு அமைப்புகள் என அனைத்தின் செயல்பாடுகளால் புலிகளின் முதலாவது கட்டமைப்பானது 1989ஆம் ஆண்டு உடைக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் பிரதி தலைவராக காணப்பட்ட மாத்தையா அவர்கள் இந்திய றோவின் சதி வலையில் சிக்கி விடுதலைப்புலிகளுக்கு துரோகமிழைத்தார் எனக்கூறி 1994 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண தள பதியான கருணா அம்மான் அவர்கள் உலக வல்லரசுகளின் புலனாய்வுகளின் உதவி யுடன், இலங்கை புலனாய்வு அமைப்பும் இணைந்து விடுதலைப்புலிகளின் அமைப்பிலிருந்து பிரிக்கப்பட்டார். இராணுவ கட்டமைப்பு உடைக்கப்படுகின்றது. அதன் தாக்கமும் ஒரு காரணமாகவும் மற்றும் உலக வல்லரசுகளின் உதவியுடன் முள்ளிவாய்க்கால் மண்ணில் இறுதி யுத்தம் இடம்பெற்று பல இலட்சம் மக்களோடு போராட்டம் முடிவுக்கு வருகின்றது.

விடுதலைப்புலிகள் அமைப்பால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆனது ஆரம்பகாலத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயுத அமைப்புகள் மற்றும் பழம்பெரும் அரசியல் கட்சிகள் எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ் ஈழ விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது அது சந்தித்த முதலாவது தேர்தலில் 22 ஆசனங்கள் பெற்று அமோக வெற்றியீட்டியது. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் வந்த தேர்தலிலும் அது 20 ஆசனங்களை பெற்று வெற்றியீட்டியது. அதன் பின்னர் இடம்பெற்ற மாகாணசபை தேர்தலிலும் கூட்டமைப்பானது வெற்றியீட்டியது. ஆனால் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்க்கக்கூடியதும் உலக அரங்கில் தமிழ் மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருந்ததும் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்தக்குற்றங்களை ஐ.நா சபையில் கொண்டு அதனை சமர்ப்பித்து அதற்குரிய தண்டனைகளை பெற்றுக்கொடுக்கும் என்று தமிழ் மக்களால் மனப்பூர்வமாக நம்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தென்னிலங்கை பேரினவாத அரசு தனது புலனாய்வு அமைப்பின் ஊடாகவும், இந்திய ஏகாதிபத்திய சுயநல பிராந்திய நலனுடைய இந்திய அரசின் புலனாய்வு அமைப்பான றோவையும் இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டமைப்பை உடைத் தெடுத்து, அதனை பிரித்து தனது புலனாய்வு செயல்பாட்டால் தமிழர்களின் ஒருங்கிணைவை உடைத்து வெற்றி கண்டது. ஐக்கியப்பட்டு ஒரே அமைப்பாக இருந்த தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்கள் தங்களின் கையறு நிலையை எண்ணி துயரடைந்த நிலை யிலும் தங்களுக்கென்று குரல்கொடுக்கவும் தமது அரசியல் சார் நிலையை உயர்த்தவும் தமது நிரந்தர அரசியல் தீர்வை எடுத்து விடலாம் என்று எண்ணி ஆறுதல் அடைந்த நிலை யில் அந்த ஆறுதலிலும் ஓர் இடி விழுந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதறு தேங்காய் போல் உடைந்துபோனது. கூட்டமைப்பில் இருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் பிரிந்து சென்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்னும் கட்சியை உருவாக்கி செயற்பட்டு வருகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மாகாணசபை தேர்தலில் களமிறக்கப்பட்ட வடமாகாண முதலமைச்சர் ஆன நீதிய ரசர் விக்னேஸ்வரன் அவர்கள் ஏற்றிவிட்ட ஏணியையும் தூக்கியெறிந்து விட்டு தனிக்கட்சி ஒன்றை ஆரம்பித்தார். அக்கட்சி தமிழ் மக்கள் தேசிய முன்னணி என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இதனைவிட கூட்டமைப்பில் ஒன்று இணைக்கப்பட்டு இருந்த ஆனந்த சங்கரி அவர்கள் கூட்டமைப்பை விட்டு விலகி தனது பூர்வீகக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியில் தொடர்ந்தும் செயல்பட்டு வருகின்றார். இந்நிலையில் கூட்டமைப்பில் இணைக்கப்பட்ட ஆயுத அமைப்பு ஆன சுரேஸ் பிரேமச்சந்திரனின் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் கூட்டமைப்பை விட்டு கருத்து முரண்பாடு காரணமாக பிரிந்து விக்னேஸ்வரன் அவர்களின் கட்சியான தமிழ் மக்கள் ஐக்கிய முன்னணியில்



இணைந்து செயற்படுகின்றார். இவ்வாறு எல்லாம் உடைபட்டு சிதறிய நிலையில் தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மற்றும் தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகிய கட்சிகள் மட்டும் கூட்டமைப்பாக இயங்கி வருகின்றது. இதேவேளை கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்பில் இருந்து விலகிய பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் அரசுடன் இணைந்து இராஜாங்க அமைச்சர் பதவி யைப் பெற்று இயங்கி வருகின்றார். அத்துடன் விடுதலைப்புலிகள் காலத்தில் அதன் அமைப்பில் இருந்த பிள்ளையான் அவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து கருணா அம்மான் விலகிய பொழுது அவருடன் இணைந்து விலகிய பின்னர் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்னும் அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வருகின்றார்.

அத்துடன் விடுதலைப்புலிகள் அமைப்பில் போராடி இறுதி யுத்தத்தில் இராணுவத்தில் சரணடைந்து புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், 'புனர்வாழ் வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் அமைப்பு' என உருவாக்கி இயங்கி வருகின்றனர். இவ்வாறு தமிழ் அரசியல் கட்சிகளை எல்லாம் இவ் இனவாத அரசானது பிரித்து மிக சாதுரியமாக செயற்பட்டு வருகின்றது. ஆயுதப் போராட்டங்கள் இடம்பெற்ற காலங்களில் அரசுடனும் இந்திய அரசுடனும் இயங்கிய ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் கூட அரசின் தந்திரவலையில் சிக்கி பிரிந்துபோனது. குறிப்பாக ரெலோ அமைப்பானது இரண்டாக பிரிந்து செயற்படுகின்றது. சிறிரெலோ என்று உதயராசா அவர்கள் தலைமையில் ஒரு அமைப்பும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ஓர் அமைப்பாகவும் ரெலோ அமைப்பு இயங்கி வருகின்றது. இதில் உதயராசா தலைமையிலான சிறிரெலோ அமைப்பானது அரசுடன் இணைந்து செயற்படுகின்றது. அதேபோல் ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பானது இரண்டாக உடைந்து செயற்படுகின்றது. ஒன்று சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களுக்கு கீழ் ஓர் அமைப்பும், வரதராஜப்பெருமாள் என்ற முன்னாள் வடகிழக்கு முதலமைச்சர் அவர்களின் கீழ் ஓர் அணியும் இயங்கி வருகின்றது. அதேபோல் ஈழவர் ஜனநாயக முன்னணியான (ஈரோஸ்) அதுவும் இரண்டாக உடைந்து செயல்படுகின்றது.

இவ்வாறு தமிழர்களின் அரசியல் தீர்வைப் பெறுவதற்கான கட்சிகள் எல்லாவற்றையும் எவ்வாறு ஆயுதப் போராட்டத்தை பிரித்து அதனை அழித்ததோ அதே போல் தமிழ் மக்களின் அரசியல் கட்டமைப்பை உடைத்து சின்னாபின்னமாக்கி செயலற்றதாக்கி வெற்றிகண்டு வருகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்கள் விழிபிதுங்கி என்ன செய்வது என்று இனியார் எமக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவார்கள். இவ்வாறு இவர்கள் எல்லோரும் பிரிந்து சிதறி ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டி எதிர்த்து நின்று அரசியல் செய்வதைப் பார்த்து தமது தலைவிதி இதுதான் என்று நினைத்து விரக்தி அடைந்த நிலையில் கடந்த தியாகி திலீபனின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகளை இப்போதைய இனவாத அரசு தடுத்தபொழுது அரசுக்கெதிராக வடகிழக்கு முழுவதும் கடையடைப்பு செய்து ஓரணி யில் இணைந்த சமிக்ஞையை வெளியிட்டு தமிழ் மக்களுக்கு ஆறுதலைக் கொடுத்தனர். இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் மக்கள் விடுதலை முன்னணி, விக்னேஸ்வரன் அவர்களின் தமிழ் மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறு ஒருங்கிணைந்து இவ் கதவடைப்பு போராட்டத்தை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டினர். தற்பொழுது மிகப்பெரும் சவாலான ஓர்காலத்தில் தமிழ் இனம் உள்ளது. 2021 மார்ச் மாதம் ஐ.நா சபையில் இலங்கை அரசுக்கெதிரான போர்க் குற்றச்சாட்டு சம்பந்தமான விவகா ரம் வர இருக்கின்றது. இதில் சகல தமிழ் கட்சிகளும் ஒருங்கிணைந்து அரசுக்கு இனிக் கால அவகாசம் வழங்கும் நடைமுறையை நிறுத்தி சரியான வழி யில் ஓர் இணக்கப்பாட்டுடன் ஓரணியில் நின்று இதனை சந்திப்பது இப்பொழுது உள்ள மிக முக்கியமாக தேவையாகும். பொறுப்புக்கூறல் விடயத்தில் இருந்து இவ் அரசானது விலகிச்சென்று போர்க்குற்றத்தில் ஈடுபட்ட இராணுவத்தளபதிகளை அரச உயர் பதவிகளில் நிறுத்தியுள்ளது. அத்துடன் வடகிழக்குப் பகுதியெங்கும் இராணுவப் பிரசன்னம் அதிகரித்துச் செல்கின்றது.

அத்துடன் சிவில் நடவடிக்கைகளில் கூட இராணுவத்தை ஈடுபடுத்தி வருகின்றது. தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி உயிர்நீத்த தமது உறவுகளை நினைவு கூர்வதற்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டதுடன் தமிழர்களின் சமய கலாச்சார விழுமியங்களைக் கூட தடுத்து நிறுத்தும் கீழ்த்தனமான செயற்பாட்டில் அரசு ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரிக்கும் கைங்கரியத்திலும் ஈடுபடுகின்றது. இதனை விட தமிழர்களின் விவசாய நிலங்களில் தொல்பொருள் ஆய்வு என்று கூறி நில அபகரிப்பில் ஈடுபடுகின்றது. இராணுவ முகாம்கள் அமைந்துள்ள தமிழர்களின் காணிகளை விடுவிப்பதில் மெத்தனப் போக்கை கடைப்பிடிக்கின்றது. இவ்வாறு திட்டமிட்டு தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் அவர்களின் கலாச்சார விழுமியங்களை அழித்தொழித்து அவர்களை போராட்ட சார் நிலையில் இருந்து அவர்களை ஒடுக்குவதில் இவ் அரசானது செயல்பட்டு வரும் நிலை யில் இவ் அரசை தமிழர்கள் தமது தீர்வு பக்கம் கொண்டு வர வேண்டுமாயின் வர இருக்கும் ஐ.நா சபை கூட்டத்தில் கருத்து வேறுபாடுகளை களைந்து ஓர் கொள்கை அடிப்படையில் புலனாய்வாளர்களின் திட்டங்களை முறியடித்து, சரியான ஓர் வரைபை ஐ.நா சபையில் சமர்ப்பித்து தமிழ் மக்களின் ஒற்றுமையையும், தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் அபிலாசைகளையும், பொறுப்புக்கூறல் விடயங்களையும் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கு சரியான தீர்வையும் பெற பிரிந்து நின்று செயல்படாமல் ஒருங்கிணைந்து ஓரணியில் செயற்பட சகல தமிழ்க் கட்சிகளையும் தமி ழினம் கேட்டு நிற்கின்றது.

**தமிழ் கிறுக்கன்**

# அந்த டிசம்பர் 26, உலகை உலுக்கிய ஞாயிற்றுக்கிழமை : சுனாமி நினைவு தினம்





கடலோர மக்களுக்கு அலைகளும், அலையின் இசையும் புதிதல்ல. பழகிப்போன இசையும் இசைந்துபோன வாழ்வும் அது. சந்தேகமில்லா உறவு கடலுக்கும் அந்த மக்களுக்கும் அந்த டிசம்பர் 26 வரை இருந்தே வந்தது. அன்று வந்த சுனாமி அலையையும் சாதாரணமாகவே நினைத்தனர். ஆனால், ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைப் பறித்து பல ஆயிரக் கணக்கானவர்களின் வாழ்வை தலைகீழாக புரட்டிப்போடும் என்று யாரும் கனவிலும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்

2004ஆம் ஆண்டு கிறிஸ்மஸின் மறுதினத்தை உலகம் அவ்வளவு எளிதில் மறக்க மாட்டாது. அந்த ஞாயிற்றுக்கிழமை எழும்பிய ஆழிப்பேரலையின் ஓலத்தின் ஓசை 16 ஆண்டுகள் கடந்தும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இப்போதுவரை அந்தப் பாதிப்பில் இருந்து மீளமுடியாமல் உலகம் உழன்று கொண்டிருக்கின்றது. உலகில் ஏற்பட்ட மிகப்பெரிய இயற்கைப் பேரழிவுகளில் சுனாமியே முதன்மையானது. 2020எனும் இவ்வாண்டு அமேசன் காடுகளை எரித்துக்கொண்டு ஆரம்பித்து இன்றுவரை ஆரம்ப சூடு தணியாமல் கடந்துவருவது வேறுகதை.

2004-ம் ஆண்டு இந்தோனேஷியாவின் சுமத்ரா எனும் தீவில் உள்ள கடல் பகுதியில் அதிகாலை வேளையில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 9.1 முதல் 9.3 ரிச்டர் அளவிற்குப் பதிவானது. இதன் காரணமாக ஏற்பட்ட சுனாமியால் சுமார் 14 நாடுகளுக்குமேல் பாதிக்கப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். உலக பொருளாதாரம் பல கோடி டொலர்கள் கடலில் மிதந்து அழிந்தது.

இலங்கையின் கடலோர மாவட்டங்கள் எல்லாம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இன்று வரை டிசம்பர் 26-ம் திகதி மறக்க முடியாத நாளாக அனைவரின் உள்ளத்திலும் உள்ளது. கடலோர மக்களுக்கு அலைகள் புதிதல்ல. அன்று வந்த அலையையும் சாதாரணமாகவே நினைத்தனர். 2004 ஆம் ஆண்டு 26 ஆம் திகதி நத்தார் பண்டிகையை கொண்டாடிய சந்தோசத்தில் திளைத்திருந்த மக்களை, துயரத்தின் எல்லைக்கு கொண்டுசெல்லும் நிலையில் அந்த கோர சம்பவம் நடந்தேறியது. இந்து சமுத்திரத்தின் அருகில் உள்ள இந்தோனேசியாவின் தீவுக் கூட்டங்களில் ஒன்றான சுமாத்திரா தீவின் வடக்கே கடலுக்கு அடியில் காலை 07 மணியளவில் 9.0 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நில நடுக்கமானது சுனாமியைத் தோற்றுவித்தது.

சுனாமி பேரலைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல், இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, அந்தமான் தீவுகள் என உலகின் 14 நாடுகளைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்து 676 உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் வீடுகள், கட்டிடங்கள், வாகனங்கள், உயிரினங்கள் என கண்ணிமைக்கும் நொடியில் அனைத்தும் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. இதில் இந்தோனேசியாவில் ஒரு இலட்சத்து 84 ஆயிரம் உயிர்களும் இலங்கையில் 35 ஆயிரத்து 322 பேரும் பலியானதாக அன்றைய ஆரம்ப அறிக்கை கூறியது.

சுனாமியின் தாக்கத்தால் அதிகளவான அழிவுகளை எதிர்கொண்ட இரண்டாவது நாடு இலங்கை என்பது வேதனையான உண்மை. எமது நாட்டில் சுமார் 35,322 பேரின் உயிர்கள் பறிபோயின. சுமார் ஐந்தரை இலட்சம் பேர் வரை இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் லட்சக்கணக்கான கட்டிடங்கள் முற்றாக தரைமட்டமாகியது. வடக்கு -கிழக்கு மாகாண கடற்கரையோரப் பிரதேசங்களே அதிகளவான சுனாமி அழிவுகளை சந்தித்தது.

இலங்கையின் கிழக்கு கல்முனைப் பகுதியை தாக்கிய சுனாமி அலையினால் முற்றாக அழிந்துபோன அக்பர் கிராமம் முதல் பொத்துவில் வரையுள்ள நீண்ட கடற்கரைப் பகுதிகளே பெருமளவு பாதிப்பை கண்டுள்ளன. மட்டுமல்லாமல் திருக்கோவில், தம்பட்டை கிராமங்கள் முழுமையாக அழிந்துள்ளன. 2004இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் இலங்கையின் பாரிய மனித உயிர்சேதம் அம்பாறை மாவட்டத்திலேயே இடம்பெற்றிருக்கின்றது. இங்கு சுமார் 9 ஆயிரத்திற்கும் அதிக மக்களை கடல் காவுகொண்டுள்ளது. இதற்கு அடுத்ததாக சுமார் 4500 பேர் ஹம்பாந்தோட்டையிலும், சுமார் 3774 பேர் காலியிலும், மட்டக்களப்பில் 2975பேரும், முல்லைத்தீவில் 2902பேரும் பலியானதாக ஆரம்ப அறிக்கை கூறியபோதிலும் பின்னர் இவை மாற்றம் ஏற்பட்டது. அதே சமயம் கொழும்பிலிருந்து ஹம்பாந்தோட்டை சென்ற ரயில், அதாவது மிகுந்த சனநெரிசல் மிக்க பயணிகள் ரயில் கடலலையின் சீற்றத்திற்கு இரையானது. இதில் மிக மகிழ்வுடன் வீடு நோக்கிப் பயணித்தவர்களில் 1700 இற்கும் மேற்பட்ட மக்கள் மாண்டு போனார்கள். இது ஆசியாவின் ரயில் விபத்துக்களில் முக்கியமானதாகவும் உள்ளது என்பதுதான் மறக்க முடியாத சோக நிகழ்வாகும்.

இந்த சுனாமியில் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 14 நாடுகளில் ஒட்டுமொத்தமாக சுமார் 2,29,866 பேர் உயிரிழந்தனர். மேலும் 1,25,000 பேருக்கு மேல் காயமடைந்தனர். 43,786 பேர் காணாமல் போயினர். மேலும் 17 லட்சத்துக்கும் அதிகமானோர் தங்கள் வாழ்விடத்தை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர். அதிகம் பாதிக்கப்பட்ட நாடான இந்தோனேசியாவில் மட்டும் 1,67,736 உயிரிழந்துள்ளனர். 37,063 பேர் காணாமல் போயினர்.

நேரடியாகப் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்த பல நாட்டு சுற்றுலாப்பயணிகளும் இந்தப் பாதிப்பில் சிக்கி இறந்தது மிகவும் சோகமான விஷயம். மீனவர்கள் சுனாமியில் சிக்கி உயிரிழந்ததால் அவர்களையே நம்பியிருந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்றுவரை அந்தத் துயரத்திலிருந்து மீண்டுவரமுடியாமல் தவித்து வருகின்றனர். சுனாமி பாதிப்பின் நினைவாக ஆங்காங்கே சுனாமி நினைவுப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. சுனாமி பாதிப்பு ஏற்பட்டு 16வது ஆண்டு நிறைவடைந்துள்ள நிலையில் உயிர்களை பறிகொடுத்த பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள், மீனவர்கள், பொதுமக்கள் எனப் பலர் ஒவ்வொரு ஆண்டும் அவர்களை நினைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த பொழுதில் இலங்கை மண்ணை காவுகொண்ட சுனாமி அலை அம்பாறையை வெகுவாக பாதித்த போது இல்லிடம் கொடுத்து, உன்ன உணவும் கொடுத்து அடைக்கலம் காத்த சம்மாந்துறை மண்ணின் மனதையும், மறைந்த அமைச்சர் அன்வர் இஸ்மாயிலின் அன்றைய நாட்களையும் பாராட்டாமல் விட முடியாது. நாட்கள் கடந்து மாதங்கள் தாண்டி வருடக்கணக்கில் அடைக்கலம் கொடுத்தது மட்டுமன்றி சுனாமியில் மரணித்த உடல்களையும் சம்மாந்துறை மண் தனது மடியில் தாங்கிக்கொண்டது இங்கு நன்றியுடன் நினைவு கூறப்பட வேண்டியதே.

**நூருல் ஹிதா உமர்**



# கிறிஸ்துமஸ் பற்றி உலகெங்கும் உள்ள சில சுவாரஸ்யங்கள்



உலகின் பெரும்பாலான மக்களால் நினைவுகூறப்படுகிற ஒரு பண்டிகை உண்டென்றால் அது கிறிஸ்துமஸ் என்னும் உலக இரட்சகரான இயேசு கிறிஸ்து பிறந்ததை நினைவுகூறும் பண்டிகையே என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையே. அனேக பாரம்பரிய மற்றும் பல கிறிஸ்தவ தேவாலயங்களில் அலங்கரிப்பதும் பிறப்பின் பாடல் ஆராதனைகள் நடத்துவதும், ஸ்டார் கட்டுவதும் கிறிஸ்துமஸ் மரம் வைத்து அலங்கரிப்பதும், கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை அனுப்புவதும் என்று மிகவும் சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய காலமிது.

இது எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக சாண்டா கிளாஸ் எனக்கூடிய கிறிஸ்துமஸ் தாத்தா பெரியோர் முதல் சிறியோர் வரை அனைவரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துவதை காண முடியும், சிறு பிள்ளைகளை மிகவும் உற்சாகத்தில் ஆழ்த்தக்கூடிய இத்தருணங்கள் யாரால் எப்படி தோற்றுவிக்கப்பட்டது என்பதை நாம் அறிவதும் அவசியம்.

கிறிஸ்துமஸ் (Christmas) ஆண்டு தோறும் இயேசு கிறித்துவின் பிறப்பைக் குறிக்ககொண்டாடப்படும்விழாவாகும். இவ்விழா கிறித்தவத் திருவழிபாட்டு ஆண்டில் திருவருகைக் காலத்தினை முடிவு பெறச்செய்து, பன்னிரண்டு நாட்கள் கொண்டாடப்படும் கிறித்து பிறப்புக் காலத்தின் தொடக்க நாளாகும். கிறித்து பிறப்புவிழா கிறித்தவர்களின் ஒரு முக்கியமான திருநாளாகும். இது பெரும்பாலான கிறித்தவர்களால் டிசம்பர் 25ஆம் நாள் கொண்டாடப்படுகிறது எனினும் கிழக்குமரபுவழிதிருச்சபைகள் இதனை யூலியன் நாட்காட்டியில் டிசம்பர் 25ஐக் குறிக்கும் நாளான ஜனவரி 7ஆம் நாள் கொண்டாடுகின்றன. கிறித்துமஸ் கொண்டாடப்படும் நாளானது மரபு வழியாக வருவதேயன்றி இது இயேசு பிறந்த நாளன்று.

**பெத்லகேமில் கிறிஸ்துமஸ்** :- இயேசு கிறிஸ்துபிறந்த இடமான பெத்லகேமில் உள்ள "சர்ச் ஆப் நேட்டிவிட்டி" யில் எளிமையான, இனிமையான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடை பெறுகிறது. மேற்குக் கரையில் உள்ள சிறுநகரான பெத்லகேமில் ஒவ்வொரு ஆண்டும் உலகெங்கிலும் இருந்து வரும் கிறிஸ்தவர்களும், உள்ளூர் மக்களும் கிறிஸ்துமஸ் பண்டிகையைச் சேர்ந்து கொண்டாடுகிறார்கள். இதையொட்டி "சர்ச் ஆப் நேட்டிவிட்டி", வண்ண வண்ணக் கொடிகளாலும், அலங்கார விளக்குகளாலும் அலங்கரிக்கப்படுகிறது. நாடகங் களுடன் கூடிய ஊர்வலம் ஒன்றும் நடத்தப்படுகிறது. இதில், அலங்கரிக்கப்பட்ட குதிரைகளில் அமர்ந்தவர்கள் முன்னிலை வகித்துச் செல்கிறார்கள். பெருவாரியான மக்கள், மத குருக்கள், பாதிரியார்கள், கன்னியாஸ்திரிகள், அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொள்கிறார்கள். தேவாலயத்தில் தெய்வக் குழந்தையின் சொரூபமும், அதன் பிறப்பைக் குறிக்கும் வெள்ளி நட்சத்திரமும் அமைந்திருக்கும் இடத்தில் ஊர்வலம் முடிவடைகிறது.

கிறிஸ்துமஸை ஒட்டி பெத்லகேமில் உள்ள ஒவ்வொரு கிறிஸ்துவரின் இல்லத்திலும் முன் கதவில் "சிலுவை" தீட்டப்படுகிறது. தொழுவத்தில் இயேசு பிறப்புக் காட்சியை உருவாக்கி வைக்கிறார்கள்.

**ஈரானில் கிறிஸ்துமஸ்** :- இஸ்லாமிய நாடான ஈரானிலும் கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுகிறது. இயேசு அவதரித்த போது அவரைக் காண வந்த வான சாஸ்திரிகளில் சிலர் வசித்த நாடாக ஈரான் கருதப்படுகிறது. ஈரானிய கிறிஸ்துவர்கள் கிறிஸ்துமஸை ஒட்டி டிசம்பர் 1-ம் திகதி முதல் நோன்பு இருக்கின்றனர். இக்காலத்தில் அவர்கள் அசைவம் உண்பதில்லை. இது "சிறுநோன்பு" எனப்படுகிறது. (ஈஸ்டருக்கு முந்தைய ஆறு வார காலத்தில் அவர்கள் "பெருநோன்பு" நோற்கின்றனர்.) கிறிஸ்துமஸ் அன்று தடபுடலான விருந்து உண்டு.

**சீனாவில் கிறிஸ்துமஸ்** :- கம்யூனிச நாடான சீனாவில் கிறிஸ்தவம், அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வமாக ஏற்கப்பட்ட மதமல்ல. ஆனால் இங்கும் ஆண்டுக்காண்டு கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் களைகட்டி வருகின்றன.

**கிறிஸ்துமஸ் தாத்தா** :- கிறிஸ்துமஸ் காலத்தில் வெள்ளைத் தாடி, சிவப்புத் தொப்பி-ஆடையில் வரும் "சான்டா கிளாஸ்" எனப்படும் கிறிஸ்துமஸ் தாத்தா, இரவில் யாருக்கும் தெரியாமல் பரிசுப் பொருட்களை வீட்டுக்குள் எறிந்துவிட்டுப் போவதாக உலக மழலைகள் நம்புகிறார்கள்.

துருக்கி நாட்டைச் சார்ந்த "செயின்ட் நிக்கோலஸ்" என்ற பாதிரியார்தான் கிறிஸ்துமஸ் தாத்தா ஆனதாக கூறப்படுகிறது. ஆனால் அதற்கு வரலாற்று ரீதியான ஆதாரம் இல்லை என்று சொல்வோரும் உண்டு. ஆனாலும் அன்பின் அடையாளமாக கிறிஸ்துமஸ் தாத்தா உலா வருவது சிறுவர்களை மகிழ்விக்கிறது.

**கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை** : *1843-ம் ஆண்டு சர்.ஹென்றி கோல் என்பவரால் முதல் கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை அனுப்பப்பட்டது. 1846-ல் ஜோசப் அன்டால் என்ற ஓவியர் ஆயிரக்கணக்கில் வாழ்த்து அட்டைகளை அச்சிட்டார். மக்கள் வாழ்த்து அட்டைகளில் வடிவு, நேர்த்தி, தொழில்நுட்பம் என பல்வேறு வகைகளிலும் கவரப்பட்டு கோடிக்கணக்கான மில்லியன் டொலர் வியாபாரப் பொருளாக வாழ்த்து அட்டை புழக்கத்திற்கு வந்தது. கிறிஸ்துமஸ் விழாவின் போது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் வாழ்த்தும் அன்பும் அறிவித்து அன்புறவை புதுப்பிக்கும் பணியை வாழ்த்து அட்டைகள் செய்கின்றன.*

**கிறிஸ்துமஸ் நட்சத்திரம்** :- அரேபிய நாடான சிரியா நாட்டைச் சேர்ந்த வானசாஸ்திரிகள் இயேசு பிறந்த இடத்தை காட்டியவான் நட்சத்திரத்தை வாழ்த்தவும் அப்புதுமையை நினைவுபடுத்தவும் கிறிஸ்துமஸ் நட்சத்திரம் தொங்க விடப்படுகிறது.

**கிறிஸ்துமஸ் குடில்** :- *1223-ம் ஆண்டு இத்தாலி நாட்டில் பிரான்சிஸ் அச்சி என்ற புனிதரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இயேசுவின் பிறப்பை வெளிப்படுத்தும், நினைவூட்டும் சிலைகளின் வழிபாடே கிறிஸ்துமஸ் குடில் வழிபாடு எனப்படுகிறது. இறை இயேசு பிறந்த மாட்டுக் குடில், இறை இயேசுவின் பெற்றோர்கள் இறை இயேசு என அன்றைய பெத்லகேமை ஒவ்வொரு ஊரிலும் அமைப்பதே மாட்டுக் குடிலும், தேவபாலமும் என்ற கிறிஸ்துமஸ் குடிலின் அமைப்பாகும். பிறந்த இயேசு பாலனை முத்தமிட்டு மகிழும் உள்ளங்களில் அன்பு, அமைதி, சமாதானம் என்று இறை இயேசு பிறக்கிறார் என்கிற நம்பிக்கையை உருவாக்க அமைக்கப்படுகிறது.*

**கிறிஸ்துமஸ் மரம்** :- *மனித வழிபாட்டு முறைகளின் துவக்கம் இயற்கை வழிபாடாகும். மனிதன் இயற்கையை வணங்கினான். ஸ்காண்டி நேவியர்கள் மரத்தை வழிபடுபவர்கள். அவர்கள் கிறிஸ்துவ மதத்திற்கு மனம் மாறினார்கள். கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளின்படி கலாச்சார மயமாகுதல், பண்பாடு மயமாகுதல் என்ற நெறிப்படி புதிய கிறிஸ்துவ மதத்திலும் ஸ்காண்டி நேவிய மக்களுக்கு மரத்தை வழிபட வழியிருந்தது. அவர்கள் மரங்களை மின் விளக்குகளால் அலங்கரித்து வணங்கினர். 500 ஆண்டுகளுக்கு முன் ஜெர்மனியர்கள் கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரிக்க ஆரம்பித்தனர். 1841-ம் ஆண்டு இங்கிலாந்து இளவரசர் ஆல்பர்ட் தனது ராஜமுறை கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டத்தில் கிறிஸ்துமஸ் மரத்தை அறிமுகப்படுத்தினார்.*

**கிறிஸ்துமஸ் கேக்** :- ஒவ்வொரு விழாக்களுக்கும் ஓர் சிறப்பான உணவு, விழா உணவாக கருதப்படும், அந்தவகையில் கிறிஸ்துமஸ் கேக் மேற்கத்திய கலாச்சாரத்தின்படி கிறிஸ்துமஸ் விழாவின் சிறப்பான உணவு பொருளாக இருக்கிறது.

**கிறிஸ்துமஸ் பூ**:- மெக்சிகோவில் "போயின்செட்டியா" என்பது கிறிஸ்துமஸ் மலராகக் கருதப்படுகிறது. இதைப் "புனித இரவின் பூ" என்கிறார்கள்.

**கிறிஸ்துமஸ் ஆடு**:- ஸ்வீடனில் கிறிஸ்துமஸ் அலங்காரங்களில் ஒன்றாக "ஜீல்பக்" என்ற வைக்கோலால் ஆன வெள்ளாடு இடம் பெறுகிறது.

**கிறிஸ்துமஸ் நம்பிக்கைகள்** : கிறிஸ்துமஸ் குறித்து கிறித்தவர்களிடம் வேறு சில நம்பிக்கைகளும் நிலவுகின்றன. அவை

கிறிஸ்துமஸ் நாளில் பிறக்கும் குழந்தைக்குச் சிறப்பு அதிர்ஷ்டம் உண்டு.

கிறிஸ்துமஸ் நாளில் பனி பொழிந்தால் ஈஸ்டர் காலம் பசுமையாக இருக்கும்.

கிறிஸ்துமஸ் நாளில் நீங்கள் எத்தனை வீடுகளில் விருந்து உண்கிறீர்களோ, வருகிற ஆண்டில் அத்தனை மாதங்கள் உங்களுக்கு மகிழ்ச்சியானதாக இருக்கும்.

கிறிஸ்துமஸ் கேக்குகளில் நாணயம், மோதிரம் போன்றவற்றை மறைத்து வைத்துப் பரிசளிப்பது மேலை நாடுகளில் வழக்கம். நாணயம் கிடைக்கப் பெற்றவர் பணக்காரராவர். மோதிரம் கிடைத்தால் விரைவில் திருமணமாகும் என்பது பொதுவான நம்பிக்கை.

கிறிஸ்துமஸ் மாலையில் நீங்கள் ஓர் ஆப்பிள் சாப்பிட்டால் அடுத்த ஆண்டு முழுவதும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.

கிறிஸ்துமஸ் நள்ளிரவில் பரலோகத்தின் கதவுகள் திறக்கின்றன. அப்போது அமரராவோர் நேராக பரலோகத்தை அடைவர்.

கிறிஸ்துமஸ் இரவில் ஏற்றப்படும் மெழுகுவர்த்திகள் மறுநாள் காலையில் அவைதானாக அணையும் வரை அணைக்கப்படக் கூடாது.

கிரேக்க நாட்டில், தொடர்ந்து வரும் ஆண்டில் தங்களைத் துரதிர்ஷ்டம் தீண்டக்கூடாது என்பதற்காக மக்கள் கிறிஸ்துமஸ் காலத்தில் பழைய காலணிகளை எரிக்கிறார்கள்.

உக்ரைனில், கிறிஸ்துமஸ் நாளில் வீட்டில் புதிதாக சிலந்தி வலை அமைத்திருந்தால் அது அதிர்ஷ்டகரமானதாகக் கருதப்படுகிறது.

**கிறிஸ்துமஸ் பண்டிகை பற்றிய சிறப்பு தகவல்கள் :**

இயேசு கிறிஸ்து கி.மு.5ஆம் ஆண்டு, பாலஸ்தீன் நாட்டின் பெத்லகேம் நகரில் பிறந்தார். பெத்லகேம் என்றால் 'அப்பத்தின் வீடு' என்பது பொருள்.

இயேசு என்ற பெயரின் எபிரேய மூலச்சொல்லான 'யெஷுவா' என்பதற்கு 'கடவுள் விடுவிக்கிறார்' என்றும், கிறிஸ்து என்ற கிரேக்க வார்த்தைக்கு 'அருட்பொழிவு பெற்றவர்' எனவும் பொருள்.

கி.பி.240களில் மார்ச் 28ந் திகதி கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் நிகழ்ந்ததாக, அக்கால கிறிஸ்தவ நாள்காட்டி குறிப்பிடுகிறது.

டிசம்பர் 25ந் திகதி கிறிஸ்துமஸ் கொண்டாடும் வழக்கம் கி.பி.336ஆம் ஆண்டு ரோம் நகரில் தோன்றியது. இந்த திகதிக்கு, போப் முதலாம் ஜூலியஸ் அங்கீகாரம் வழங்கினார்.

கிறிஸ்துமஸ் கரோல் கீதங்கள் 4ஆம் நூற்றாண்டு முதல் ஆலயங்களிலும், 13ஆம் நூற்றாண்டு முதல் தெருக்களிலும் பாடப்படுகின்றன.

கிறிஸ்துமஸ் விழாவின்போது, இயேசு பிறந்த காட்சியை குடிலாக அமைக்கும் வழக்கத்தை, அசிசி புனித பிரான்சிஸ் 1223ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்.

கிறிஸ்துமஸ் தாத்தா பரிசு கொடுக்கும் வழக்கம் 10ஆம் நூற்றாண்டில் தோன்றினாலும், தொப்பையும், குல்லாவும் கொண்ட சான்டாகிளாஸ் 19ஆம் நூற்றாண்டில்தான் வடிவம் பெற்றார்.


16ஆம் நூற்றாண்டு முதலே கிறிஸ்துமஸ் விழாக்களை நட்சத்திரங்கள் அலங்கரித்து வருகின்றன.

15ஆம் நூற்றாண்டு முதல் வழக்கத்தில் உள்ள கிறிஸ்துமஸ் மரம், 1882ஆம் ஆண்டு முதன்முதலாக மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது.

**தொகுப்பு :- சப்தஹி**



# பிராந்தியச் செய்திகள்



## கொரோனா வைரசினால் உயிரிழந்தவர்களின் உடல்கள் தொடர்பில் போலி செய்திகள்- சுகாதார அமைச்சு

கொரோனா வைரஸ் உயிரிழப்புகள் தொடர்பில் போலிச்செய்திகளை உருவாக்க வேண்டாம் என சுகாதார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொரோனா வைரசினால் உயிரிழந்தவர்களின் உடல்கள் தகனம் செய்யப்பட்டமை அடக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் போலியான பல அரசியல்வாதிகளும் இணையத்தளங்களும் போலியான செய்திகளை பரப்புவதை அவதானிக்க முடிந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரசினால் உயிரிழந்தவர்கள் அனைவரினதும் உடல்கள் இதுவரையில் தகனம் செய்யப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.




## திரையரங்குகளை ஜனவரி முதலாம் திகதி முதல் திறப்பதற்கு பிரதமர் அறிவுறுத்தல்

சுகாதார வழிகாட்டல்களுக்கமைய ஜனவரி முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள திரையரங்குகளை திறப்பதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அனுமதியளித்துள்ளார்.

அதற்கமைய தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதேசங்களிலுமுள்ள திரையரங்குகள் ஜனவரி முதலாம் திகதி முதல் திறக்கப்படும்.

திரையரங்குகள் மூடப்பட்டுள்ளமையினால் கலைக்கும், கலைஞர்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் திரைப்பட தயாரிப்பாளர்கள், திரைப்பட இயக்குநர்கள் மற்றும் திரைப்பட கண்காட்சியாளர்கள் சங்கம் உள்ளிட்ட கலைஞர்கள் பலர் சமீபத்தில் கௌரவ பிரதமருக்கு அறிவுறுத்தியிருந்தனர்.



அதன் பிரதிபலனாக சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கு மதிப்பளித்து திரையரங்குகள் திறக்கப்பட வேண்டும் என பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

திரைப்படத்துறையை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஒருபோதும் தயங்காது என்று தெரிவித்த கௌரவ பிரதமர், கொவிட்-19 காரணமாக திரையரங்குகளை மூடுவதனால் திரையரங்குஉரிமையாளர்களுக்குஏற்படும்பாதிப்பைகுறைப்பதற்கும்,திரைப்படதயாரிப்பாளர்கள் முகங்கொடுத்துள்ள நெருக்கடி மற்றும் திரைப்பட துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து கலைஞர்கள், பல்வேறு தொழில் வல்லுனர்கள் முகங்கொடுத்துள்ள பாதிப்புகளை தவிர்த்தல் மற்றும் இரசிகர்கள் குறித்து கவனம் செலுத்தி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

திரையரங்குகளை திறக்கும்போது குறித்த திரையரங்குகள் உரிய முறையில் தொற்றுநீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய கௌரவ பிரதமர் அவர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் திரைப்படங்களை பார்வையிடுவதற்கு திரையரங்குகளுக்கு வருகைத்தருவோரும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

கொவிட்-19 சவாலுக்கு மத்தியில் கலைஞர்களையும், திரைப்படத் துறையையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில்பலகலைஞர்கள் கௌரவ பிரதமரின் இத்தீர்மானத்திற்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.

## வடக்கில் முதலாவது கொரோனா மரணம் – வவுனியாவைச் சேர்ந்த பெண்ணுக்கு தொற்று உறுதி

வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட வவுனியா பெரிய உலுக்குளம் பகுதியைச் சேர்ந்த 60 வயதான பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று இருப்பது நேற்றுமுன்தினம் உறுதிசெய்யப்பட்டது.

குறித்த பெண் கடந்த இரு நாட்களுக்கு முன்பாக வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை ஒன்றுக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரி பெறப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. பரிசோதனை முடிவின் பிரகாரம் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

குறித்த பெண்மணி வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி அநுராதபுரம் மித்சிறி செவன் வைத்தியசாலையில் சாவடைந்துள்ளார். கொரோனாத் தொற்றுடன் கூடிய நிமோனியா காய்ச்சலே அவரது உயிரிழப்புக்குக்காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொட்டகலை பகுதியில் ஒன்றரை வயது சிசு உட்பட 07 பேருக்கு தொற்று உறுதி

ஒன்றரை வயது சிசு உட்பட ஏழு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொட்டகலை பொது சுகாதார பரிசோதகர் எஸ். சௌந்தர்ராகவன் தெரிவித்தார்.

கடந்த 23ஆம் திகதி கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி அதிகாரப்பகுதிக்குற்பட்ட பகுதிகள் 60 பேருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையின் அறிக்கை வெளியாகியதிலிருந்து 07 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தலவாகலை கூமுட் தோட்டத்தில் ஒன்றரை வயது ஆண் சிசு உட்பட 35 வயதுடையபெண் ஒருவர், 20 வயது இளைஞன் ஒருவருமாக மூவரும், தலவாகலைஒலிரூட்தோட்டத்தில்56வயது ஆண் ஒருவரும், கொட்டகலை டிரைட்டன் கே.ஒ பிரிவில் 59 வயது பெண் ஒருவர், டிரைட்டன் டீ.டி பிரிவில் 20 வயது பெண் ஒருவர், டெரிகிளேயர் தோட்டத்தில் 37 வயதுடைய ஆண் ஒருவருமாக ஏழு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் , கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரையில் கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகாரப்பகுதியில் 44 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன் மேற்குறிப்பிட்ட 07 தொற்றாளர்களும் சுயதனிமை மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.



## கொழும்பின் சில பகுதிகளில் நாளை தனிமைப்படுத்தல் நீக்கம்

மருதானை வாழைத்தோட்டம் டாம் வீதி வெள்ளவத்தை மயூராபிளேஸ் உட்பட பல பகுதிகளில் நாளை காலை(2020.12.28) ஐந்து மணி முதல் தனிமைப்படுத்தல் உத்தரவு நீக்கப்படுவதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மருதானை வாழைத்தோட்டம் டாம்வீதி ஸ்லேவ் ஜலண்டில் ஹுனுப்பிட்டி வெள்ளவத்தையில் மயூராபிளேஸ் பொரளையில் ஹல்ஹகாவத்தை வெல்லம்பிட்டியில் லக்சந்த வீடமைப்பு திட்டம் ஆகியவற்றின் தனிமைப்படுத்தலே நாளை காலை(2020.12.28) முதல் நீக்கப்படுகின்றது.




# பிரபல இயக்குனருடன் இணைந்த அமலாபால்!

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் அமலாபால். இவர் நடிப்பில் தற்போது அதோ அந்த பறவை போல, கடாவர் ஆகிய படங்கள் உருவாகியுள்ளது. தற்போது இவர் கன்னடத்தில் 'யூ டர்ன்' (U Turn) படம் மூலம் புகழ்பெற்ற இயக்குநர் பவன் குமார் இயக்கும், குடி யெடமைதே ( Kudi yedamaithe ) என்னும் இணையத் தொடரில் முதன்மை கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார்.

இந்த 8 பகுதிகள் கொண்ட ஆஹா (aha) ஒரிஜினல் தொடர், ரசிகர்கள் இதுவரை கண்டிராத வகையிலான, ஃபேண்டஸி திரில்லராக உருவாகிறது. இத்தொடரில் அமலா பால் ஜோடியாக ராகுல் விஜய் நடிக்கிறார். இக்கதையின் மையம் ஒரு காவல் துறை அதிகாரிக்கும், டெலிவரி பையனுக்கும் நடக்கும் டைம் லூப்பை அடிப்படையாக கொண்டது. இது தவிர இயக்குனர் நந்தினி ரெட்டி இயக்கும் ஆந்தாலஜி சீரிஸிலும் அமலா பால் முதன்மை வேடத்தில் நடிக்கிறார்.



# நடிகை ஹராகுல் பிரீத் சிங்கிற்குக்ஹ கொரோனா!



நடிகை ராகுல் பிரீத் சிங்கிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழில் தீரன் அதிகாரம் ஒன்று படத்தின் மூலம் பிரபலமான இவர் தனக்கு கொரோனாதத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

தொற்று ஏற்பட்டாலும் தாம் நலமுடன் இருப்பதாக தெரிவித்துள்ள அவர், கடந்த சில நாட்களாக தம்முடன் தொடர்பில் இருந்தவர்கள் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டு, கொரோனா சோதனை செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் ஹமே டேஹ என்ற திரைப் படத்திற்கான படப்பிடிப்புக்கு அவர் தயாரான நிலையிலேயே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

# சிம்பு நடிக்கவுள்ள படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு

ஈஸ்வரன், மாநாடு படங்களை தொடர்ந்து சிம்பு நடிக்கவுள்ள படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கன்னடத்தில் சிவராஜ்குமார், ஸ்ரீமுரளி ஆகியோர் நடித்து வெற்றிபெற்ற படம் 'மஃப்டி'. இப்படத்தை நார்தன் என்பவர் இயக்கி இருந்தார். இப்படத்தின் தமிழ் ரீமேக்கையும் அவரே இயக்கி வந்தார். தமிழில் சிம்பு, கௌதம் கார்த்திக் ஆகியோர் நடித்தனர்.

முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்த நிலையில், சிம்புவுக்கும், தயாரிப்பாளருக்கும் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக அடுத்தகட்ட படப்பிடிப்பு நடத்தாமல் கிடப்பில் போட்டனர்.

அண்மையில் இப்படத்தின் இயக்குனர் மாற்றப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும், சில்லுனு ஒரு காதல் படத்தை இயக்கிய கிருஷ்ணா இப்படத்தை இயக்க உள்ளதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில், அதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை தயாரிப்பு நிறுவனமான ஸ்டுடியோ கிரீன் வெளியிட்டுள்ளது. அதன்படி தங்களது 20ஆவது படத்தில் சிம்பு, கௌதம் கார்த்திக் நடிக்க உள்ளதாகவும் கிருஷ்ணா இயக்க உள்ளார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வருகிற டிசம்பர் 24 ஆம் திகதி இப்படத்தின் தலைப்பு வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# புதிய முல்லையை வரவேற்ற பாண்டியன் ஸ்டோர்ஸ் குடும்பம்

விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் பாண்டியன் ஸ்டோர்ஸ் மக்களிடம் படு பிரபலமாக ஓடிக் கொண்டிருக்கிறது.




அவர் அப்படியே சொந்த குடும்பம் போல் பழகி வருகிறார்கள். நடிகை சித்ராவின் மறைவிற்கு அவர்கள் பட்ட கஷ்டங்களை நாம் பார்த்தோம்.

சித்ராவின் முல்லை கதாபாத்திரத்திற்கு காவ்யா என்பவர் நடிக்க உள்ளார். தற்போது பாண்டியன் ஸ்டோர்ஸ் குடும்பம் புதிய முல்லையை வரவேற்றுள்ளார்கள்.




# குளிர்கால ஃபேஸ் பேக்குகள்

ஃபேஸ் பேக்குகளில் எத்தனையோ உள்ளன. ஆனால் அவற்றில் சரும வறட்சியைத் தடுக்கும் ஃபேஸ் பேக்குகளை வாரம் 1-2 முறையாவது போட வேண்டும். இங்கு குளிர்காலத்திற்கு ஏற்ற சில ஃபேஸ் பேக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பிடித்ததை முயற்சித்துப் பாருங்கள்.

**1. அவகேடோ ஃபேஸ் பேக்**

அவகேடோவில் ஈரப்பசையை தக்க வைக்கும் தன்மை அதிகம் உள்ளது. எனவே அதனை மசித்து, முகத்தில் தடவி 10-15 நிமிடம் ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

**2. வாழைப்பழ ஃபேஸ் பேக்**

வாழைப்பழத்திலும் சரும வறட்சியைத் தடுக்கும் தன்மை அதிகம் உள்ளது. எனவே அதனைப் பயன்படுத்தியும் ஃபேஸ் பேக் போடலாம். அதற்கு மசித்த வாழைப்பழத்தை முகத்தில் தடவி 10-15 நிமிடம் ஊற வைத்து, பின் தேன் பயன்படுத்தி மசாஜ் செய்து 10 நிமிடம் ஊற வைத்து, இறுதியில் முகத்தை குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

**3. மோர் ஃபேஸ் பேக்**

மோரில் கொழுப்புக்கள் இருப்பதால், அந்த மோரில் சிறிது மஞ்சள் தூள் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

**4. கற்றாழை ஜெல் ஃபேஸ் பேக்**

கற்றாழை ஜெல் சரும வறட்சியைத் தடுப்பதோடு, சருமத்தின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். அதற்கு அந்த ஜெல்லை முகத்தில் தடவி உலர வைத்து பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

**5.தண்ணீர் குடிக்கவும்**

என்ன செய்தாலும், தினமும் அதிக அளவில் தண்ணீர் குடிப்பதை மட்டும் மறக்கக் கூடாது. இதனால் உடலில் நீர்ச்சத்தானது அதிகம் இருந்து, சருமமானது வறட்சியடையாமல் இருக்கும்.

**6.சன்ஸ்க்ரீன்**


குளிர்காலங்களில் வெயிலின் தாக்கம் அதிகம் இருக்காது என்று பலர் சன்ஸ்க்ரீன் லோசனைப் பயன்படுத்தமாட்டார்கள். ஆனால் எவ்வளவு தான் கடுமையாக வெயில் அடிக்காவிட்டாலும், சன்ஸ்க்ரீன் பயன்படுத்துவதை மட்டும் தவிர்க்கக்கூடாது.




## அவகோடா பழத்தில் உள்ள நன்மை தரக்கூடிய சத்துக்கள் என்ன...?

அவகோடா பழத்தில் அதிகமான நார்ச்சத்துக்கள் இருக்கிறது. அவகோடா பழத்தில் உள்ள விட்டமின் சத்துக்கள் கொழுப்புகளை குறைக்கும். வைட்டமின் எ, டி, கே, இ போன்ற விட்டமின்கள் உள்ளன.

அவகோடா பழத்தில் ஒமேகா 3, ஃபேட்டி அமிலம், விட்டமின் எ சத்துக்கள் அதிகமாக அடங்கியுள்ளது. இந்த பழத்தை சாப்பிடுவதால் நமது மூளையானது அதிகமாக செயல்படும் ஆற்றல் வாய்ந்தது.



அவகோடா பழம் சாப்பிட்டு வந்தால் இருதய சம்பந்தமான பிரச்சனைகள் வருவதை தடுத்து நிறுத்தும். கருவுற்ற பெண்கள் இந்த அவகோடா பழத்தை தாராளமாய் சாப்பிடலாம். அவகோடா பழத்தில் போலிக் எனும் விட்டமின் அதிகமாக உள்ளது. இந்த போலிக் விட்டமின் தாயிற்கும் வயிற்றில் இருக்கக்கூடிய குழந்தையின் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக உள்ளது.

உடல் எடை அதிகமாக உள்ளவர்கள் அவகோடா பழத்தை தாராளமாய் உண்ணலாம். இந்த பழத்தில் இருக்கக்கூடிய சத்துக்கள் உடலில் இருக்கக்கூடிய தேவையற்ற கொழுப்புகளை நீக்கிவிடும். கவனிக்க வேண்டியவை இந்த பழம் சாப்பிட்டால் அதிக நேரம் பசி இருக்காது.

உடலுக்கு அவசியம் தேவைப்படும் மினரல் சத்து பொட்டாசியம். அவகோடா பழத்தில் அதிகமாக பொட்டாசியம் நிறைந்துள்ளது. பொட்டாசியம் சத்து நிறைய கிடைப்பதால் உடலில் இரத்த கொதிப்பு, நெஞ்சு வலி, சிறுநீரகத்தில் ஏற்படும் பிரச்சனைகளை இந்த அவகோடா பழத்தில் இருக்கக்கூடிய பொட்டாசியம் சத்துக்கள் நீக்கிவிடும்.

அவகோடா பழத்தில் அதிகமாக விட்டமின் சி, இ அடங்கியுள்ளது. இந்த வைட்டமின் சத்துக்களால் நம் உடல்களில் ஏற்படக்கூடிய கை, கால் வீக்கங்களை குறைத்துவிடும். ஆர்த்ரடிஸ் நோய் வராமல் தடுக்க தினமும் அவகோடா பழத்தை எடுத்துக்கொண்டால் இந்த நோய் விரைவில் குணமாகும்.

தொகுப்பு :- சப்தஹி

# ஐ.நா சபையின் கூட்டத் தொடர்களும் ஏமாற்றப்படும் தமிழினமும்

இலங்கையில் தமிழினம் கடந்த 40 ஆண்டு காலமாக தனது சுயநிர்ணய உரிமைக்காகவும்தமது இனத்தின்காலாச்சார விழுமியங்களை பாதுகாப்பதற்காகவும் தமது இருப்பை உறுதி செய்வதற்காகவும் பல வழிகளில் பெரும்பான்மை பௌத்த மேலாதிக்க சிந்தனை கொண்ட அரசியல் தலைமைகளுடன் போராடி வந்தனர். இதில் அகிம்சை போராட்டங்கள் ஆரம்பத்தில் இடம்பெற்று அது ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் தமது இராணுவ பலம் கொண்டு அடக்கி அதனைநீர்த்துபோகச்செய்துவெற்றிகண்டது. அகிம்சை வழியில் இனி இவர்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வரமுடியாது எனக்கண்ட தமிழினம் ஆயுதப் போராட்ட வழிக்கு தனது இனத்தை காக்க முடிவெடுத்து அது ஒரு மக்கள் போராட்டமாக பெரும்பான்மையான தமிழினம் அவ் ஆயுதப் போராட்டத்துக்கு உறுதுணையாகநின்றுசுமார்30வருடங்கள் ஓய்வுகளின்றி எந்த நாட்டின் துணையுமின்றி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் போராடி வந்தனர்.

அவ் அமைப்பானது தனியே ஆயுதப் போராட்ட அமைப்பாக மட்டுமன்றி தமிழினத்தின் எதிர்கால நிலை கருதி தமது மக்களுக்கான சிவில் நடவடிக்கைகளையும் சகல இராணுவக் கட்டமைப்புகளையும் அத்துடன் பொருண்மிய மேம்பாட்டு கட்டமைப்புகளையும் கலை கலச்சார பண்பாடுகளை பிரதிபலிக்கும் சகல கட்டுமானங்களையும் உருவாக்கியதுடன் நீதி நிர்வாக அமைப்புகளையும் உருவாக்கி தமிழினத்துக்கான ஓர் நீதிக் கோவையையும் உருவாக்கி நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் என்பனவும் உருவாக்கப்பட்டு நிதி நடவடிக்கைகளுக்கான வங்கி சேவைகளையும் உருவாக்கினர். அத்துடன் இளைஞர்களுக்கான தொழினுட்ப அறிவினை மேம்படுத்தவும் கல்விசார் விழுமியங்களில் மேன்மைபடவும் அறிவியல் நகரங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில் இவ்வாறு தமது மக்களுக்கான எதிர்காலத்தில் தங்களை தாங்களே ஆளும் நிலைமை வந்தால் அதற்குரிய சகல கட்டுமானங்களும் தமிழர் பகுதிகளில் மிகவும் நேர்த்தியாக இயக்கப்பட்டு வந்த நிலையில் இதனை கண்டு பொறுத்துக்கொள்ள முடியாத சிங்கள இனவாத மதவாதம் கொண்ட அரச தலைமைகள் இவ் கட்டமைப்புகளையும் அத்துடன் தமிழினத்தின் விடிவுக்காகவும் தமிழினத்தின் பாதுகாப்பு வேலியாகவும் விளங்கும் விடுதலைப் புலிகள் அமைப்பை பூண்டோடு அழித்து அவர்களை அடி வேரோடு அழிக்க தென்னிலங்கை அரச தலைமைகள் முடிவெடுத்து இனத்துக்காக போராடும் விடுதலைப்புலிகள் அமைப்பை பயங்கரவாதிகள் என உலகம் முழுவதும் பிரச்சாரம் செய்து மக்களுக்கான போராட்டத்தை பயங்கரவாத போராட்டமாக சித்தரித்து உலக வல்லரசுகள் என சொல்லப்படும் நாடுகள் எல்லாம் தடைசெய்ய நடவடிக்கை எடுத்து அதில் வெற்றி கண்டது.

இதில் அமெரிக்கா. இந்தியா. பிரித்தானிய போன்ற நாடுகள் இந்தியாவை தவிர மேற்குறிப்பிட்ட நாடுகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் எதுவும் இல்லாத நிலையில் அல்லது அவ் அமைப்பால் அமெரிக்கா. பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு ஆபத்தில்லை என்ற போதிலும் இலங்கையை சந்தோசப்படுத்தவும் இலங்கையில் தமது பிராந்திய நலன்சார் ஆதிக்கத்தை நிலை நிறுத்தவும் இவ்வாறு தடைகளை போட்டது மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் ஆரம்ப கால போராட்டத்தின் தொடக்க நிலையில் வெறும் 30 பேர் கொண்ட ஓர் குழுவாக அரசுக்கெதிராக செயற்பட்ட காலத்தில் பிரித்தானிய அரசு தனது இராணுவ உதவியை வழங்கியது தற்பொழுது தெரிய வந்துள்ளது. 1985களில் யாழ் மாவட்டம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பொழுது இராணுவத்தின்ர் வெளியேற முடியாத நிலையில் இலங்கை விமானப்படை உலங்கு வானூர்திகள் மூலம் அக்காலங்களில் புலிகள் மீது தாக்குதல்கள் இடம்பெற்ற நிலையில் இவ் உலங்கு வானூர்திகளில் அக் காலகட்டங்களில் தாக்குதல்களில் ஈடுபட்டது. பிரித்தானியா படையினர் என்றும் அத் தாக்குதல்களில் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்பை விட அப்பாவி தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் அதிகம். அக்காலகட்டத்தில் உலங்கு வானூர்திகளில் இருந்து அசிட் போன்ற திரவங்கள் கூட வீசப்பட்டன. 1985 பிற்பகுதிகளில் இலங்கை இராணுவம் யாழ் மாவட்டத்தின் வடமராட்சியை கைப்பற்ற இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையும் முதல் முதலில் இலங்கை இராணுவம் பெயர் சூட்டி இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையான ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையில் இவ்வாறு வானிலிருந்து அசிட் வீசித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் பிரித்தானிய இராணுவத்தினர் ஈடுபட்ட விடயம் தற்பொழுது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இவ்வாறு உலக வல்லரசுகள் ஆரம்பகாலம் தொட்டு இலங்கை அரசுக்கு உதவி செய்து வந்ததுடன் தமிழினத்தை அழிக்க உறுதுணையாக இருந்துள்ளனர். இந்நிலையில் விடுதலை புலிகளின் போராட்டம் ஓர் உச்ச நிலைக்கு வந்து இராணுவ சமநிலையில் அவர்களின் கை ஓங்கிய நிலையில் அதுவரை தரைப்படை கட்டமைப்பும் கடல்படை கட்டமைப்பும் கொண்ட அவ் அமைப்பானது இறுதி கட்டங்களில் விமானப்படை கட்டமைப்பையும் உருவாக்கி இருந்தனர். இதனையடுத்து இலங்கை இனவாத அரசின் பெரும் பிரச்சாரங்களாலும் புலிகளின் விமானப்படை கட்டமைப்பு ஒருகாலத்தில் தமக்கு அச்சுறுத்தலாக மாறும் என எண்ணிய மேற்குலக வல்லரசுகள் இலங்கை அரசின் விசப்பிரச்சாரத்துக்கு உட்பட்டு இறுதிப்போர் இடம்பெற்ற 2009 ஆம் ஆண்டுக்கு முன் இலங்கை அரசுக்கு சகல இராணுவ தளபாட உதவிகளும் மற்றும் ராடர் உதவிகளையும் மற்றும் யுத்தங்களில் பாவிக்க முடியாது என தடை விதிக்கப்பட கிளஸ்டர் குண்டுகள் (கொத்துகுண்டுகள்) என அனைத்தையும் வழங்கியதுடன் இராணுவ புலனாய்வு வல்லுனர்களையும் சிறப்பு படைப்பிரிவுகளையும் விடுதலைப்புலிகளுக்கும் தமிழினத்துக்கும் எதிராக சிங்கள அரசுக்கு வழங்கி இலங்கையில் இடம்பெற்றுமிகப்பயங்கரமான இறுதிப் போரில் பல இலட்சக்கணக்கான மக்கள் கொத்து கொத்தாக அழிய உறுதுணையாக இருந்துள்ளன.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தில் பயன்படுத்திய கொத்துக்குண்டுகள் மற்றும் கிளஸ்டர் குண்டுகள். நச்சுபுகை கொண்ட ஆட்லறி குண்டுகள் என உலக வல்லரசுகளின் உதவியுடன் இலங்கை படைகள் வன்னியில் கோரத்தாண்டவம் ஆடியது. முள்ளிவாய்க்கால் மண்ணில் தமிழினத்தின் இறுதி அத்தியாயம் மிகக் கோரமாக எழுதப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் அங்கவீனர் களாயினர். நூற்றுக்கணக்கான பெண்கள் விதவைகளாயினர். அப்பாவி குழந்தைகள் கந்தக வெடி மருந்தில் கருகிப்போயினர். பல்லாயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இதிலும் மிகக் கொடுமையான விடயம் யாதெனில் வெள்ளை கொடியுடன் சரணடைந்த போராளிகள் பொதுமக்கள் ஈவு இரக்கமின்றி நிர்வாணம் ஆக்கப்பட்டு சுட்டு படுகொலை செய்யப்பட்ட காணொளிகள் பலவெளிவந்து உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பல பெண் போராளிகள் அரக்கத்தனம் கொண்ட இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கோரமாக கொலை செய்யப்பட்டனர். லிபியா. ஈராக். வியட்நாம் போன்றநாடுகளில்இடம்பெற்றகொலைகளை விட மிகப்பயங்கரமாகவும். மிகக் கோரமாகவும் இடம்பெற்ற இவ் அழிவுகள் இடம்பெற்று 11 ஆண்டுகள் நிறைவாகின்றன. ஆனால் இதற்கு காரணமாக அரச படைகளுக்கோ அல்லது இதற்கு அனுமதி வழங்கிய அரசியல் தலைமைகளுக்கு எது விதவிசாரனைகளுமின்றிதமிழினத்துக்கான



நீதியின்றி கையறு நிலையில் தான் தமிழினம் இருக்கின்றது. ஐ.நா பொதுச்சபை கூட்டத்தொடர்கள் வருடாவருடம் வருகின்ற நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரில் நடந்த படுகொலைகளுக்கான நீதி கோரி ஐ.நா மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் மையத்தின் கூட்டத்தொடர்கள் இடம்பெறும் காலங்களில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் மக்கள் அத்துடன் இப்போரின் கோரத்தால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள். தமது உறவுகளை தொலைத்துவிட்டு தேடும் காணாமல்போனோர் அமைப்புகள். தமிழ் அரசியல் தலைமைகள் மற்றும் தமிழ் நாட்டில் உள்ள ஈழ உணர்வாளர்கள் என எல்லோரும் ஐ.நா கூட்டத்தொடர்களில் தமிழ் மக்களுக்கான நீதிகோரி போராடி வரும் நிலையில் கடந்த கால கூட்டத்தொடர்களால் இலங்கை அரசுக்கு கால அவகாசங்கள் வழங்கப்பட்டு உள்ளக விசாரனை பொறிமுறை, வெளிநாட்டு விசாரனை பொறிமுறை இலங்கை மீதான பொருளாதார தடையென பேசப்படும் நிலையில் சட்டபடி குற்றம் இழைத்த படையினர். படைத்தளபதிகள் மற்றும் சிங்கள அரசியல் தலைமைகள் என எல்லோருக்கும் விசாரனைகள் இடம்பெற்று தண்டனைகள் வழங்கப்படவேண்டும். லிபியாவில் இடம்பெற்ற உள்நாட்டு படுகொலைகளுக்கு நீதிகேட்டு போராடிய பொழுது அமெரிக்கா அப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி லிபியாவின் சர்வாதிகாரியான கடாபி அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

ஈராக் ஜனாதிபதி சதாம் உசைனுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கெல்லாம் அமெரிக்கா உறுதுணையாக இருந்தது. ஆனால் இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் படுகொலைகளுக்கு பின்னால் இவ் வல்லரசுகளின் கை இருந்துள்ளது. இங்கு நடந்த படுகொலை களின் இரத்தவாடை அவர்களிடமும் காணப்படுகின்றது. இந்தியா முதற்கொண்டு சீனா. பிரித்தானிய. பாகிஸ்தான். இஸ்ரேல் என அனைத்து நாடுகளின் கைகளிலும் இரத்த வாடை உள்ளது. இதில் ஐ.நா கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக எந்த நாடுகள் தீர்ப்பு சொல்ல முன்வரும் அத்துடன் இலங்கையின் அமைவிடம் இலங்கை மீதான வல்லர சுகளின் தேவைப்பாடு மேற்குறிப்பிட்ட வல்லரசுகளின் பிராந்திய பாதுகாப்பு நலன் என அனைத்திலும் இலங்கை செல்வாக்கு செலுத்துகின்றது. அத்துடன் இலங்கைக்கு இறுதி யுத்தத்தில் உதவி வழங்கிய நாடுகளின் கட்டமைப்புகளை கவனித்துப்பார்த்தால் மிகத்தெளிவாக விளங்கும். இந்தியா. சீனா. பாகிஸ்தான். பிரித்தானியா. இஸ்ரேல். அமெரிக்கா என ஆசிய ஐரோப்பிய வல்லரசுகள் அனைத்தும் இணைந்து வழங்கியுள்ளது. இதுஎவ்வாறுஉள்ளதெனில் கொலை செய்தவனுக்கு உறுதுணையாகவும் அக்கொலைக்கு உதவி வழங்கியவரிடமே இக்கொலைக்கான நீதி கேட்பது போலாகும். இங்கு ஒரு விடயத்தை கவனிப்போம். வரும் கூட்டத்தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக ஓர் தீர்மானத்தை எடுத்தால் என்று வைத்துக்கொள்வோம். இலங்கை. சீனா உறவை அமெரிக்கா விரும்பவில்லை. சீனாவை பழிவாங்கவும் இலங்கைக்கு ஓர் அழுத்தத்தை கொடுக்கவும் இம் முடிவை எடுத்தால் மறுபக்கம் இந்தியா இலங்கையை காப்பாற்ற முன்வரும். ஏனெனில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரில் இந்தியாவின் பங்கு கணிசமானது என அப்போதைய ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார். எனவே இந்நிலையில் இலங்கைக்கு அவ்வாறு ஓர் அழுத்தம் ஏற்படுமாயின் மேலதிகமாக இந்தியா இறுதி யுத்தத்தில் எவ்வாறு உதவிகள் செய்தது என்று சொல்லி அதனை வெளிப்படுத்த இலங்கை முன்வரும். இதனால் இந்தியாவுக்கு தனது நாட்டில் எதிர்ப்புகளும் அரசியல் ரீதியாக பெரும் பிரச்சினையையும் அத்துடன் இலங்கைக்கு இவ்வாறான அழுத்தங்கள் ஏற்படும் பொழுது கட்டாயம் சீனா ஆதரவு வழங்கும். தனது முழுப்பலம் கொண்டு இலங்கையை காப்பாற்றும். இதனை ஒருபோதும் இந்தியா விரும்பாது. விரும்பியோ விரும்பாமலோ இந்தியா - இலங்கை அரசு பக்கம் தான் நிற்கும். தமிழ் நாட்டில் ஈழ உணர்வாளர்கள் என்ன போராட்டம் பண்ணினாலும் இன்று உள்ள மோடி அரசை நம்பி அவருடன் இணைந்து தற்பொழுது ஆட்சியில் உள்ள கோட்டபாய அவர்களை வழிக்குக்கொண்டு வர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சி மேற்கொள்வதாக அண்மைக்கால செய்திகள் தெரிவிக்கின்றது.

இது உண்மையில் சாத்தியமற்ற விடயம். இலங்கை அரசு மிகச் சாதூரியமாக சீனாவை உள்வாங்கியுள்ளது. இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் கூட்டமைப்பின் சொல்லைக்கேட்டோ அல்லது தமிழ் நாட்டில் உள்ள ஈழ உணர்வாளர்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலையில் தற்பொழுது இல்லை என்றே கூறலாம். அவ்வாறு அழுத்தம் இந்தியா பிரயோகித்தால் அது சீனாவுக்கு சாதகமாக மாறிவிடும். எனவே இந்தியா இவ்விடயத்தில் இலங்கை அரசுக்கு சார்பாக தான் இருக்கும். இந்நிலையில் அமெரிக்காவும் இந்தியாவை பகைத்துக்கொண்டு இலங்கைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காது. அத்துடன் இலங்கை இஸ்ரேல் உறவு முறையானது 1975களில் இருந்து வருகின்றது. இலங்கைக்கு எதிராக வரும் தீர்மானங்களில் இஸ்ரேல் அரசு இலங்கைக்கு சார்பாக தான் இருக்கும். இஸ்ரேலை அமெரிக்கா ஒருபோதும் எதிர்க்காது. இதனையெல்லாம் மீறி சரி இந்தியாவுக்கும் அடிபணியாது. அமெரிக்கா இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வருமாயின் இந்தியாவுக்கு ஆதரவாகவும் சீனாவுக்கு ஆதரவாகவும் ரஷ்யா உள்ளது. இது மிகப் பிரச்சினையாக அமெரிக்காவுக்கு உருவெடுக்கும். அத்துடன் பிரித்தானியாவும் 1980 களில் தமிழினத்துக்கு எதிராக செயற்பட்டுள்ளது. தற்பொழுது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

12ஆம் பக்கம் பார்க்க...

**தாயகத்தான்**

# முஸ்லிம் சமூகத்தை மேலும் சங்கடப்படுத்தவேண்டாம் – பேராசிரியர் றமீஸ் அப்துல்லா



நூருல் ஹுதா உமர்

இலங்கை முஸ்லிம் சமூகம் வரலாற்றில் சமகாலத்தில் மிக மோசமான நிலைக்கு உள்ளாகியிருக்கிறது. அந்நியர் ஆட்சிக்காலத்திலும் பல்வேறு முரண்பட்ட சூழ்நிலைகள் உருவாகியிருந்தாலும் மத ரீதியான இம்சைக்கு பெரிதும் உட்படவில்லை. சமகாலத்தில் கொரோனா தொற்று நோயை காரணமாக வைத்து இல்லாத ஒரு பிரச்சினையை உருவாக்கி மீண்டும் அதிலிருந்து மீள்வதற்காக முஸ்லிம் சமூகம் மண்டியிட்டுக்கிடக்கிறது என தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அந்த அறிக்கையில்

ஈழத்தின் இனப்பிரச்சினை ஆரம்பத்தில் சிங்கள - தமிழ் பிரச்சினையாகவே இருந்தது. பின்னர் அது சிங்கள - தமிழ் - முஸ்லிம் பிரச்சினையாக உருவெடுத்தது. இந்தக் காலப்பகுதியிலேயே முஸ்லிம்கள் தனித்தரப்பாக தம்மை அடையாளப்படுத்த முனைந்தனர். சில சிறிய கட்சிகள் முஸ்லிம்கள் பெயரில் ஆரம்பிக்கப்பட்டாலும் அது அவ்வப்போதேகரைந்துவிட்டது. ஆனால் எண்பதுகளுக்கு பின்னால் முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் கட்சி பெருவளர்ச்சி கண்டது. அக்கட்சியின் தலைமைத்துவம் 2000 ஆண்டளவில் தனது தனித்துவ அடையாளத்தை மாற்றி தேசிய ஐக்கிய முன்னனி (EM) என்ற கட்சியினையும் உருவாக்கியது. அஷ்ரபின் மரணத்திற்கு பின்னர் இந்தக் கொள்கைகளை முன்னெடுப்பதை விட முஸ்லிம் காங்கிரஸ் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதிலே அதிக அக்கறை செலுத்தியது. அதேநேரம் அக்கட்சி இக்காலத்திலே துண்டு துண்டாக உடைந்து போனது.

முஸ்லிம்களிடமிருந்து வந்த அரசியற்கட்சிகளின் பேரம் பேசும் திராணியும் அதேநேரம் முஸ்லிம் சமூகத்திற்குள்ளேயே இடம் பெற்ற மத ரீதியான சிந்தனைச் சலவையின் விஷ்வரூபமும் தேசிய அபிவிருத்தியில் முஸ்லிம்களின் இணக்க ரீதியான பங்களிப்பும் பிற சமூகத்திற்கு மத்தியில் முஸ்லிம்கள் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியது. உண்மையில் இது அதீத கற்பிதமான ஓர் அச்ச உணர்வாகும். இந்த உணர்வினை பிற சமூகத்திலுள்ள தீவிர சிந்தனையாளர்கள் நன்கு பயன்படுத்திக்கொண்டனர். இந்த காலகட்டத்தில் தான் அளுத்கம. அம்பாறை. திகன சம்பவங்கள் நடந்தேறின. ஈஸ்டர் தாக்குதலும் இதனைத் தொடர்ந்தே நடந்தது. முஸ்லிம்கள் சூழ்நிலையின் கைதியாக மாறினர். கிறிஸ்தவ சமூகம் அமைதி காத்த அதேவேளை இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவும் பிற சமூக தீவிர சிந்தனையாளர்கள் தவறவில்லை.

இந்தக் கட்டத்தில் தான் ஆட்சி மாற்றம் இலங்கையில் ஏற்பட்டது. பெரும்பாலான முஸ்லிம் கட்சிகள் ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரிக்க சிலர் பொதுஜன பெரமுனவுடன் இணைந்திருந்தனர். புதிதாக உருவாக்கப்பட்ட கோத்தபாய அரசின் அமைச்சரவையில் ஒரே ஒரு முஸ்லிம் அமைச்சரே இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. வரலாற்றில் பெருமளவிலான முஸ்லிம்கள் அரசாங்கத்தில் இல்லாத ஒரு சூழ்நிலை இக்காலத்தில் இடம்பெற்றது. இந்த சூழ்நிலையில்தான் கொவிட் - 19 வைரஸ் உலகெங்கும் பரவத் தொடங்கியது. அது இலங்கையையும் ஆட்கொண்டிருந்தது.

இதன் காரணமாக உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யவும் தகனம் செய்யவும் உலக சுகாதார அமைப்பு ஆலோசனை வழங்கியது. இந்த ஆலோசனையை உலகின் 189 நாடுகள் ஏற்றுக்கொண்டு சடலங்களை நல்லடக்கம் செய்ய அனுமதித்தோடு இலங்கை மாத்திரம் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களின் உடல்களை தகனம் செய்யவேண்டும் என்று கட்டாயமாக்கியது. இது முஸ்லிம்களைப் பொறுத்தவரை மிக கவலையான ஒரு தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்திற்கு எதிராக முஸ்லிம் தரப்பிலிருந்த வழக்குகளும் முன்வைக்கப்பட்டன. அதே நேரம் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் சர்வதேச மன்னிப்பு சபை முதலானவும் இந்த தீர்மானத்தை கண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுகாதார நிபுணத்துவக்குழுவை காரணம் காட்டி இலங்கை அரசாங்கம் பல தடவை தப்பித்துக்கொண்டது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினை முஸ்லிம்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். உலக நாடுகளின் பல அமைப்புக்களும் தொற்றுநோயியல் நிபுணர் பலரும் இந்தத் தீர்மானத்திற்கு எதிரான கருத்தினை முன்வைத்திருக்கிற சூழ்நிலையில் இந்த வழக்கிற்கு சாதகமான தீர்ப்பு கிடைக்குமென்று முஸ்லிம்கள் அதிகம் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படாதே தள்ளுபடி செய்யப்பட்டது. முஸ்லிம்களும் நியாயமாக சிந்திக்கின்ற தரப்பினரும் எதிர்பார்த்திராத இந்த முடிவினால் ஏமாற்றப்பட்டனர்.

இந்த வழக்கில் முஸ்லிம்களின் சடலங்களை எரிப்பதற்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரமுகர் பிரபலமான சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வாதிட்டமை குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து சில நாட்களில் பாராளுமன்றத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இது தொடர்பான மிகக் காரசாரமான உரையொன்றை ஆற்றினார். 'தமிழ் மக்களுக்கு எதிராகவும் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகவும் இன வாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது' என்ற கருத்தினை பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் முன்வைத்தார். இதன் பின்னர் முஸ்லிம் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகம் விழித்துக்கொண்டனர். முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்காமை குறித்தும் சுகாதார நிபுணர் குழு குறித்தும் பாராளுமன்றில் கேள்வி எழுப்பினார். இவற்றுக்கு நீதி கிடைக்காவிட்டால் முஸ்லிம்கள் வேறு பாதையில் செல்லக்கூடும் எனவும் எச்சரித்தார். அதேநேரம் நீதியமைச்சர் அலி சப்ரி அவர்கள். முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதம் தூக்க நேரும் என மிக வெளிப்படையான கருத்தினை முன்வைத்துள்ளார்.

# வாழ்க்கை தத்துவங்கள்

சகோதரர் துணையிருப்பின் ஒரு போதும் தனியன்(தனித்த ஆள்) ஆகான்.
இத்தனையும் என்னிடம் உண்டு... உன்னிடம் உண்டா??
வாழ்ந்தவனுக்கு அனுபவம் பதில் சொல்லும்
வாழ்பவனுக்கு காலம் பதில் சொல்லும்

வாழப் போறவனுக்கு மனம் பதில் சொல்லும்.
அன்பின் ஆழம் தெரியாத மனிதா.
நீ உன் தாயின் அரவணைப்பை அறிந்திருக்க மாட்டாய்.

நட்பின் ஆழம் தெரியாத மனிதா.
நீ உன் தந்தையின் பாசத்தை அறிந்திருக்க மாட்டாய்.
காலப் போக்கில் உன் வாழ்வே தெரியாது இருந்து விடுவாய்.

கண்ணை மூடும் போது தூங்குகிறோம். கண்ணைத் திறக்கும் போது எழுகிறோம். அது போல் விழுகிற போது எழுந்துவிடு எழும் போது விழுவது சகஜம் அதற்காக விழுந்த படியே இருந்து விடாதே.

குறை உடலில் இருந்தால் அதை நீ பொருட்படுத்தாதே. உள்ளத்தில் உள்ளதா முதல் அதை நிவர்த்தி செய்து விடு. நீ உன்னை நேசிப்பாய் பின் மற்றவர்கள் உன்னை நேசிப்பர்.

கனவு இல்லம் கனவாகலாம். ஆனால் இல்லம் ஒரு போதும் கனவாகி விடக்கூடாது.

இமைகள் திறக்கின்றன நீ பார்ப்பதற்கு, இமைகள் மூடிவிட்டால் பார்வையை இழந்துவிடுவாய்.

உதடுகள் திறக்கின்றன மனதில் இருப்பதை வெளியிட, உதடுகள் மூடிவிட்டால் ஊமையாகி விடுவாய்.

பிரிவுகள் ஏற்படும்போதே நீ வெளிச்சத்தை சந்திக்கிறாய் வாழ்வில்.

ஒருவன் எப்பொழுது தனக்கு ஏற்படும் தடைகளையும் துன்பங்களையும் கருத்திற்கொள்ளாமல் வாழ்கிறானோ அவனே வாழ்வில் நிறையத் தோல்விகளைச் சந்தித்தவனாவான். வெற்றி பெற்றவன் துன்பத்தையும் தடங்களையுமே வாழ்வில் கொண்டவனாக இருப்பான். பல தடவை தோற்றுவிடு நீ உன் வாழ்வை வென்று விடுவாய்.

காற்றின்றி படகுகள் அசைவதில்லை.
தாயே நீ இன்றி எனக்கு முன்னேற்றம் ஏது?
கடல் அலையே அசையாதிருக்கும் படகை மூழ்கடிக்காதே.

உனக்கு ஒரு பொருள் பிடித்திருந்தால் உன் பெற்றோரைத் தானே முதல் கேட்கிறாய்.. ஏன் நீ வளர்ந்த பிறகு அவர்களிடம் கேட்பதை விட்டு உன்வழி போகிறாய். நீயும் ஒரு நாள் பெற்றோர் ஆவாய் என்பதை மறந்து விட்டாயோ?.

பெற்றோரின் பெறுமதி என்ன தெரியுமா? நீ வாழும் வரை அவர்களுக்கு துன்பம் கொடுக்காது அவர்களது மரியாதையை இழக்க விடாது காப்பது. இல்லையேல் உன் பெறுமதி உன்னை விட்டு சென்று விடும்.

காதலிப்பதால் ஏற்படும் நன்மையை விட அக் குறுகிய காலத்தில் ஏற்படும் தீமை அதிகம். நான் காதலித்தவனும் அல்ல காதலிப்பவனும் அல்ல.

கனவே உன் கடலில் என்னை மூழ்கடித்து விடாதே எனக்கு நீந்த தெரியும். அவ்வாறு நான் நீந்தித் தப்பி விட்டால் நீ தோற்று விடுவாய்.


நம்பிக்கை நற்கனவை நனவாக்கிவிடும். அவநம்பிக்கை உன் வாழ்க்கையையே கனவாக்கிவிடும்.

11ஆம் பக்க தொடர்ச்சி...

ஆகவே பிரித்தானியாவும் இதில் இலங்கைக்கு எதிராக முடிவு எடுக்காது. ஆகவே இதற்கான தீர்வு தான் என்ன ? இதற்கு உலகில் உள்ள புலம் பெயர் தமிழ் மக்கள் இங்கு இடம்பெற்ற அழிவுகளின் புகைப்படங்களுடன் கிறிஸ்தவ சிலுவைகளையும் சுமந்து அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் போன்ற நாடுகளில் பெரும் எழுச்சியுடன் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுத்தல் உலகில் பெரும்பான்மை பலம் கொண்டது. பெரும்பாலான வல்லரசுகள் கிறிஸ்தவ சமயத்தை பின்பற்றுகின்றார்கள். ஓர் காலத்தில் இஸ்ரேல் மக்கள் நாடு இன்றி பல நாடுகளில் ஏதிலிகளாக சுற்றி திரிந்தனர். பல நாடுகளில் அடிமையாக வாழ்ந்தனர். ஆனால் அவர்கள் கிறிஸ்தவம் என்ற ஆயுதத்தைதமது கவசமாக கொண்டதனால் அமெரிக்கா, பிரித்தானிய போன்ற வல்லரசுகளின் கவனத்தையீர்த்து இன்று உலகில் சிறிய நாடாக காணப்பட்டாலும் உலக முதல் தர வல்லரசுகள் எல்லாம் இஸ்ரேல் நாட்டுக்கு உறுதுணையாக உள்ளது. அவ்வாறான ஓர் கவனத்தை ஏன் தமிழினம் பெறக்கூடாது.

இது ஓர் மதமாற்ற செயற்பாடு அல்ல. புரிய வேண்டியவர்களுக்கு புரிய வேண்டிய பாஷையில் கூறுவது போலானது தான் இவ் விடயம். எனவே உலக வாழ் புலம்பெயர் தமிழினம் மற்றும் தமிழ் நாட்டில் உள்ள ஈழ உணர்வாளர்கள் இலங்கை வாழ் தமிழர்கள் எல்லோரும் இவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டால் அது உலக வல்லரசுகளையும் அங்கு வாழ் கிறிஸ்தவ மக்களையும் தமிழர்கள் பக்கம் திருப்பலாம். இங்கு இடம்பெற்ற படுகொலைகளுக்கான நீதியும் கிடைக்கலாம்.

அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளில் 80 வீதமான மக்கள் கிறிஸ்தவர்கள். அவர்களை இவ்வாறான போராட்டங்களின் முலம் திரும்பிபார்க்க வைக்க முடியும். அவர்களும் தமிழர்களுடன் கைகோர்க்கும் பட்சத்தில் வல்லரசு ஆட்சியாளர்கள் இலங்கைக்கு எதிராக திரும்ப வாய்ப்பு ஏற்படும். நடக்காத விடயத்துக்காக காலத்தை வீணடிக்காமல் காலம் கருதி சரியான பொறிமுறையூடான எமது நியாயத்தை கோரி சர்வதேசத்திடம் தீர்வை கேட்காமல் வெறுமனே கூட்டத்தொடர்களுக்கு சென்று இலங்கை அரசுக்கு கால அவகாசத்தை வழங்கி ஒன்றும் நடக்கப்போவதில்லை. ஆகவே இனியாவது சரியான பாதையில் தமிழினம் பயணிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.




## புதிய ரொக்கெட் மூலம் 5 செயற்கைகோள்களை விண்ணில் செலுத்தியது சீனா!

சீன விண்வெளி ஆய்வு மையம் ஹைனான் மாகாணத்திலுள்ள ஏவுதளத்திலிருந்து புதிய ரொக்கெட் மூலம் 5 செயற்கைகோள்களை ' விண்ணில் செலுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

'லாங்க் மார்ச் 8' (Long March 8) என பெயரிடப்பட்டுள்ள இப் புதிய ரொக்கெட் 4.5 தொன் எடையை சுமக்கும் திறன் கொண்டதாகும்.

இதன் மூலம் புதிய ரொக்கெட் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டதோடு, 5 செயற்கைகோள்களும் புவி வட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டதாக சீன விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



## இன்ஸ்டாகிராம் சேவையில் சிக்கல்

புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பொது வெளியில் பகிர உதவும் சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராம் சேவையில் சிக்கலை எதிர்கொண்டு வருவதாக அதன் பயனர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

பல பயனர்கள் தங்களது ஆண்ட்ராய்டு மொபைல் தொலைபேசியில் இன்ஸ்ட்டாகிராம் அப்ளிகேஷனை பயன்படுத்துவதில் சிக்கலை சந்தித்து வருவதாகவும் புகார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக 800 க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளதாகவும் DOWNDETECTOR.COM தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த சிக்கல் குறித்து இன்ஸ்ட்டாகிராம் நிறுவனம் இதுவரை எந்த தகவலையும் வெளியிடாமல் உள்ளது.

அண்ரொய்ட் மற்றும் IOS இயங்கு தளம் கொண்ட இரண்டு விதமான மொபைல் போன் பயனர்களும் இந்த சிக்கலை எதிர்கொண்டு வருவதாக தெரிகிறது. இன்ஸ்ட்ராகிராம் அப்ளிகேஷன் சிக்கலால் தங்களது போனே பழுதாகி விட்டதாக சிலர் எண்ணியதாகவும் தெரிவித்துள்ளனர்.

தொலைபேசியை ரீஸ்டார்ட் செய்வது, பூட் செய்வது, அப்ளிகேஷனை அன் இன்ஸ்டோல் செய்து மீண்டும் இன்ஸ்டால் செய்தாலும் இந்த சிக்கலுக்கு தீர்வு கிடைக்கவில்லை என பயனர்கள் தெரிவித்து வருகின்றனர். அண்மையில் கூகுள் நிறுவனத்தின் இணைய சேவைகள் பாதிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.




## 2024 ஆம் ஆண்டு வெளிவருமா அப்பிள் நிறுவனத்தின் புதிய கார்?

தானாக இயங்கும் தொழிநுட்பத்துடன் கூடிய காரை வரும் 2024 ஆம் ஆண்டு வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்ய அப்பிள் நிறுவனம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

புராஜெக்ட் டைட்டன் என்ற பெயரிலான கார் உற்பத்தி திட்டத்தை கடந்த 2014 முதல் அப்பிள் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. ஆனால் அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படாததால் ஒரு கட்டத்தில் அதை கைவிட்டு விட்டு மென்பொருள் தயாரிப்பில் கவனம் செலுத்தஆரம்பித்தது.

இந் நிலையில் டெஸ்லாவில் பணியாற்றிய டக் பீல்ட் (Doug Field) 2018 ல் அப்பிளில் சேர்ந்து கார் திட்டத்தை முன்னெடுத்தார். அதிலிருந்து கார் உற்பத்தி பணிகள் வேகம் பெற்று பயணியர் காரை உருவாக்கும் பணிகள் நடக்கின்றன.

குறைந்த விலையில் பட்டரிகள் பொருத்தப்பட்டு, அதிக பயண தூரம் கிடைக்கும் வகையில் அப்பிளின் கார் இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



## கூகுள் நிறுவனத்துடன் கைகோர்க்கும் ஒன்பிளஸ்!

ஒன்பிளஸ் நிறுவனம் புதிதாக ஸ்மார்ட்வொட்ச் உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டு வருவதாக டீசர்கள் மூலம் அறிவித்து இருந்தது. எனினும், இதுவரை இந்த ஸ்மார்ட்வொட்ச் அறிமுகம் செய்யப்படவில்லை.

புதிய ஸ்மார்ட்வொட்ச் மொடலை உருவாக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அந்நிறுவன தலைமை செயல் அதிகாரி தெரிவித்து இருக்கிறார். மேலும் கூகுள் நிறுவனத்துடன் இணைந்து வியர் ஒஎஸ் தளத்தை உருவாக்கி வருவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒன்பிளஸ் தலைமை செயல் அதிகாரி பீட் லௌ புதிய தகவல்களை சமீபத்திய பேட்டியில் தெரிவித்தார். புதிய ஒன்பிளஸ் ஸ்மார்ட்வாட்ச் 2021 ஆண்டு அறிமுகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இதன் வெளியீட்டு திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லை.

முன்னதாக புது ஒன்பிளஸ் வொட்ச் பற்றிய விவரங்கள் ஐஎம்டிஏ (இன்போகாம் மீடியா டெவலப்மென்ட் அத்தாரிட்டி) வலைதளத்தில் லீக் ஆகி இருந்தது. அதில் புதிய ஒன்பிளஸ் வொட்ச் டபிள்யூ301ஜிபி எனும் மொடல் நம்பர் கொண்டு உருவாகி இருப்பதாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

ஒன்பிளஸ் நிறுவனம் தனது வொட்ச் மொடலை எப்போது வெளியிடும், அதன் விலை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் என்பது குறித்து இதுவரை எவ்வித தகவலும் இல்லை.





# ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள்

**29.11.2020 அன்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி...**

**அறிமுகம்**

மனிதனைப் பற்றியும் அவன் வாழும் சூழலைப் பற்றியும் மொழியியல், தொல்லியல், கல்வியியல், மெய்ப்பொருளியல், கல்வெட்டியல், சமூகவியல், உளவியல், மேலாண்மையியல், பொருளியல், வணிகவியல், வங்கியியல், மக்கள் தொகையியல், மானிடவியல், சட்டவியல், புவியியல், கவின்கலையியல், நாட்டுப் புறவியல், விளையாட்டுவியல் எனப் பல இயல்கள் ஆராய்கின்றன. இவ்வாறான எல்லா இயல்களையும் ஆய்வு செய்வதே வாழ்வியலாகும். உளவியல் உள்ளத்தின் கோலங்களையும் கோணங்களையும் ஆராய்கின்ற ஓர் அறிவியல் போல வாழ்வியல் வாழ்வின் அம்சங்களையும் அல்லது பகுதிகளையும் ஆராய்கின்ற ஓர் அறிவியலாகும். சமூகத்தைப் பற்றிய முழு அறிவு சமூகவியல் போல வாழ்க்கையைப் பற்றிய முழு அறிவு வாழ்வியல் ஆகும் எனக்கூறலாம்.

தனிமனிதனும் சமூகமும் இயங்குவதில் மனிதனுடைய ஆசைகள் - பாசங்களுக்கு மத்தியில், அவனது தேவை நோக்கத்திற்கான அவனது முயற்சிகள் சரியான செயல் வடிவத்தில் சரியான முறையில் அமுலாக்கம் பெறச்சமூக நடைமுறைகளில் நல்லதொரு முறைமை கொண்டு நிற்பது வாழ்க்கை நெறியாகும். தனி மனித, குடும்ப, சமூக உறவுகள் அனைத்திலும் ஒரு கறாரான ஒழுங்கு, பக்குவம், நேர்மை பேணப்பட்டு மனித வாழ்வின் உள்முகமான அம்சங்கள் சிறக்கச் செய்வது வாழ்க்கை நெறியாகும். மனிதனால், தொடங்கப்பட்ட வாழ்க்கையை நெறிப்படுத்தும் நோக்கில் அவ்வப்போது எழும் முரண்பாடுகள், போக்குகள் ஆகியவற்றுக்கிடையேஉள்ளநல்ல அம்சங்களை ஒருமுகப்படுத்திக் கொண்டு வாழ்க்கை சீரடைய பின்புலமாகவும், சரியான துணையாகவும் இருப்பது வாழ்க்கை நெறியின் இலக்கு. மனிதனிடம் நல்ல நடத்தை உணர்வுகள் இடம்பெறச் செய்து, அனுமதிக்கக்கூடியது - கூடாதது என்பதன் எல்லை நிர்ணயித்து வாழ்க்கை ஒழுங்கைப் பாதுகாப்பதாகும்.

கலை, இலக்கியம் தொடர்பாக வரும் போதும், குறிக்கும்போதும் மனிதனது வாழ்க்கையைக் குறிக்கும் சொல்லாக வாழ்வியல் என்ற சொல் திகழ்கின்றது. அந்த வாழ்வியலானது சமூகத்திற்குச் சமூகம் வேறுபடலாம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஒரு பகுதியினருக்கு வாழ்வியலாகத் தெரிவது இன்னொரு பகுதியினருக்கு வாழ்வியல் பிரச்சினையாகத் தெரியலாம். வாழ்க்கையானது, தனிமனித வாழ்க்கை, குடும்பவாழ்க்கை, கூட்டு வாழ்க்கை, சமூக வாழ்க்கை எனப் பாகுபடுகின்றது. பண்பாடு என்னும் சொல்லின் பொருள் இன்று, மனித வாழ்வியலின் வரலாற்று வளர்ச்சி நிலையை எடுத்துக் கூறுவதாகவும் அமைந்துள்ளது. குடிப்பெயர்வு, குடியேற்றம், கலப்புத்திருமணம் முதலிய நிகழ்வுகளால் இன்று பண்பாட்டில் கலப்பு ஏற்படுகின்றது. இதனால், ஒவ்வொரு சமூகத்தின் மத்தியிலும் வித்தியாசமான வாழ்வியல் தோன்றுகின்றது. எனவே, மனித வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் யாவும் வாழ்வியலில் அடங்கும். ஆகவே, மனித வாழ்க்கையின் இயல்பை இயம்புவது வாழ்வியல் ஆகும்.

**வாழ்வியல் பிரச்சினைகள்**

இயல்பாக மனிதனுடைய வாழ்க்கை சாதாரண நிலையில் ஒழுங்காகச் சென்றால், வாழ்வியலாகும். முரண்பாடுகள், பிறழ்வுகள், மூட நம்பிக்கைகள் என அசாதாரண நிலையில் வாழ்க்கை சென்றால், அது வாழ்வியல் பிரச்சினையாகின்றது. சங்ககால இலக்கியங்களில் மக்களின் வாழ்வியல் கூறப்பட்ட அளவுக்கு வாழ்வியல் பிரச்சினைகள் கூறப்படவில்லை. ஆனால், வேறு மொழிகளில் இலக்கண நூல்களிலும் எழுத்து, சொல், யாப்பு, அணி பற்றிய இலக்கணம் உண்டே தவிர, மக்களின் வாழ்வியலை ஆராய்ந்த பொருள் இலக்கணம் இல்லை. அந்தப் பெருமை தொல்காப்பியத்தையே சாரும். சங்க கால மக்களின் வாழ்வியலை தொல்காப்பியம் அகம், புறம் என வகைப்படுத்திக் கூறுகின்றது. நவீன இலக்கியங்களில் மக்களின் வாழ்வியல் கூறப்படும் அளவிற்கு வாழ்வியல் பிரச்சினைகளும் கூறப்பட்டுள்ளன. அத்தோடு, பிரச்சினைகளுக்கான காரணங்களையும் தீர்வுகளையும் சில நவீன இலக்கியங்கள் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் கூறியுள்ளன.

மனித வர்க்கம் தனது வாழ்வியல் தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒருவரோடொருவர் தொடர்புகொண்டும் ஒன்றிணைந்தும் வாழ முற்பட்ட போது தான் சமுதாயம் என்ற அமைப்பு உருவாகியது. மனித வாழ்வின் தொடக்க நிலையிலேயேகூட்டுவாழ்க்கையின்தேவை உணரப்பட்டது. ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை மனித வாழ்க்கையில் ஒருவரோடொருவர் இணைந்து வாழ்தல் அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் எவருடன் இணைவது, எவ்வாறு இணைவது? எந்தச் செயல்களில் இணைவது? முதலிய பிரச்சினைகள் தோன்றின. அன்று தொடக்கம் இன்று வரை உலகம் முழுவதும் பரவி வாழ முற்பட்ட மக்களிடையேதிருமணம், குடும்பம், உறவுமுறை, சமூக நெறி, சமயம், ஒழுக்கம், இனம் ஆகிய முறைகளில் ஒத்த இயல்பு ஏற்படவில்லை. எனவே, ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன் கொண்டிருக்கும் சிக்கலான சமூக உறவுமுறைத் தொடர்புகளே சமூகம் என்பது புலப்படுகின்றது. இது உருவமுள்ளதாக எண்ணும் போது மக்கள் குழுவையும் உருவமற்றதாகக் கருதும் போது மக்கள் வாழ்வியலையும் குறிக்கும் ஒரு சமூகத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களால், விரும்பத்தகாதவையாகவும்வெறுத்தொதுக்கப்பட வேண்டியவையாகவும் கருதப்படும் நடத்தை முறைமைகள் அல்லது சூழல்கள் வாழ்வியல் பிரச்சினைகளாகக் கருதப்படுகின்றன.

வாழ்க்கையில் இருந்து இலக்கியம் உருவாகிறது. வாழ்க்கைக்கே அது பயன்படுகின்றது. எனவே ஒரு தலைசிறந்த இலக்கியப்படைப்பு வாழ்க்கை பற்றி ஆழ்மனதைத் தொடும் வகையில் ஏதாவது சொல்ல வேண்டும். அது வாழ்வியல், வாழ்வியல் பிரச்சினையாகவும் இருக்கலாம்.

தனிமனிதனது வாழ்க்கைப் பிரச்சினைகளையும்குடும்பத்தினது வாழ்க்கைப் பிரச்சினைகளையும் இணைத்து சமூகத்தின் வாழ்க்கைப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. எனவே, சமுதாயப் பிரச்சினைகளே வாழ்வியல் பிரச்சினைகள் ஆகும். சமூகப் பிரச்சினைகள் பற்றி புல்லா, சர்மா, சுகார்பிற்றி ஆகிய சமூகவியலாளர்கள் கூறிய விடயங்களை சி.இ.மறைமலை தனது 'இலக்கியமும் சமூகவியலும்' என்னும் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார். மனிதனது வாழ்க்கையோடு தொடர்புடைய பிரச்சினைகள், சமூகவியல் பிரச்சினைகள் பற்றி அவர்கள் கூறும் வரைவிலக்கணங்கள் வாழ்வியல் பிரச்சினைகளுக்குப் பொருந்தும்.

இலக்கியம் மக்களின் வாழ்க்கையைச் சான்றாகக் கொண்டது. மனித உணர்வுகளை வெளிக்காட்டுவது. இதன் அடிப்படையில் இது பொதுவான இயல்பைக் கொண்டது. எனினும் உலகில் வாழும் மக்கள் அனைவரும் ஒருவிதமான வாழ்க்கையை வாழ்பவர்கள் அல்லர். இவர்கள் தாம் வாழ்கின்ற பிரதேசங்களின் காலநிலை, பொருளாதார நடவடிக்கைகள், உணவுப் பழக்கங்கள், வாழ்க்கை நடைமுறைகள், மொழி முதலிய பல்வேறு அம்சங்களில் வேறுபட்டே நிற்கின்றனர். எனவே இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படும் வாழ்வியல் பிரச்சினைகளும் பொதுத்தன்மை இன்றி சமூகத்திற்கு சமூகம், பிராந்தியத்திற்குப் பிராந்தியம் வித்தியாசப்படுகின்றன.

**இலக்கியத்தில் வாழ்வியல் பிரச்சினைகள்**

இதுவரை நாங்கள் இலக்கியம், வாழ்வியல், வாழ்வியல் பிரச்சினைகள் ஆகியவற்றின் விளக்கங்களைத் தனித்தனியே நோக்கினோம். இனி இலக்கியங்களில் வாழ்வியல் பிரச்சினைகள் வெளிப்படுத்தப் பட்டிருக்கும் தன்மையை நோக்குவோம்.

இலக்கியத்தில் வாழ்வியல் பிரச்சினைகள் இடம் பெறவேண்டும். இலக்கியத்தில் வாழ்வியல் இடம்பெற வேண்டும் என இலக்கிய ஆய்வாளர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இன்பவாதிகள் சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை எதிர் கொள்ளாமல் அவற்றுடன் தம்மை ஈடுபடுத்தாமல் இன்பமூட்டுவதையே எழுத்தின் முக்கியமான நோக்கமாகக் கொண்டு அதற்கிணங்க கற்பனைச் சம்பவங்களை இலக்கியங்களாகப் படைப்பர். இவர்களை கற்பனைவாதிகள் என்றும் கூறலாம். முற்போக்கு அணியைச்சாராத இலக்கியவாதிகள் இலக்கியத்தில் வாழ்வியல் பிரச்சினைகள் இடம்பெறும் அதனைத் தத்துவரூபமாகச் சித்தரித்து விடும்போது காலப்போக்கில் சமுதாயம் தானாக முன்னேறும் என்றும் கூறுகின்றார்கள். சமூகத்தில் கல்வி, பொருளாதாரம், கலாசாரம், அரசியல் முதலியவற்றில் மாற்றங்கள் ஏற்படும் போது வாழ்வியல் பிரச்சினைகள் இல்லாமல்போகும் என்பது இவர்களின் நிலைப்பாடாகும். முற்போக்கு இலக்கியவாதிகள் வாழ்வியல் பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைக்கின்றனர். இவர்கள்சகல வாழ்வியல் பிரச்சினைகளுக்குமான விடுதலை வர்க்கப் புரட்சியே என்கின்றனர். இவ்வாறு இலக்கியம் படைக்கும் இன்பவாதிகள், முற்போக்கு அணிசாராதவர்கள், முற்போக்குவாதிகள் என்ற மூவருள்ளும் முற்போக்குவாதிகளின் இலக்கியங்களே சமூகத்தை உள்ளவாறு வெளிப்படுத்துகின்றன எனலாம்.



ஆகவே சமூக வாழ்வியல் சிறப்படைவதற்கு வாழ்வியல் பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்வுகள் என்பன தெளிவாக் கூறப்படும் போது படைப்பிலக்கியங்கள் நின்று நிலைக்கக் கூடியவையாக இருக்கும். இலக்கியங்களைப் பொதுவாக இரண்டு வகைப்பாட்டிற்குள் வகுக்கலாம். ஒன்று மரபு சார்ந்த இலக்கியங்கள்:- தமிழில் தோற்றம் பெற்ற இவ் இலக்கிய வகைப்பாட்டில் சங்க காலத்தின் ஆரம்பம் முதல் நவீன காலம் வரை தோன்றிய இலக்கியங்களைக் குறிப்பிடலாம்.

**தொடரும்...**

**புயல் சிறீகந்தநேசன் - தலைவர், புதுமை எழுத்தாளர் ஒன்றியம்**

# உலக செய்திகள்

## கடலுக்கு அடியில் உலக சாதனை படைத்த நீச்சல் வீரர்!

மெக்சிகோவில் Stig Severenson என்ற நீச்சல் வீரர் கடலுக்கு அடியில் 202 மீற்றர் (662 அடி) ஆழத்தில் 8.7 அங்குல நீளத்தை ஒரே மூச்சில் நீந்தி உலக சாதனை படைத்துள்ளார்.

குறித்த வீரர் லா பாஸ் கடற்கரையில் இந்த சாதனையை நிகழ்த்தினார். குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையிலும், பெருங்கடல்கள் மற்றும் கடலுக்கடியிலுள்ள உயிர்களை பாதுகாப்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த சாதனை நிகழ்த்தியதாக அந்த வீரர் தெரிவித்தார்.




## 2 ஆண்டுகளுக்குப் பின்னர் வெடித்த ஹவாய் எரிமலை!

உலகில் எப்போதும் கொதித்துக் கொண்டிருக்கும் எரிமலைகளில் ஒன்றான ஹவாய் தீவின் கிலாயுயா (Kilauea) எரிமலை, இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் வெடித்து லாவா எனப்படும் தீக்குழம்பை கக்கி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதனால் எரிமலையின் வாய் பகுதியில் 134 மீற்றர் ஆழத்திற்கு தீப்பிழம்பால் ஆன ஏரி உருவாகி ஒரு மணி நேரத்திற்கு ஒரு மீற்றர் உயரம் என்ற அளவுக்கு தீக்குழம்பு உயர்ந்து வருவதாக கூறப்படுகின்றது.

ஞாயிறு இரவு வெடிக்க ஆரம்பித்ததிலிருந்து இதுவரை 200 கோடி கலன்கள் அளவுக்கு இந்த எரிமலை தீக்குழம்பை வெளியிட்டுள்ளது. 33 ஏக்கர் பரப்பளவை ஆக்கிரமிக்கும் அளவுக்கு இது இருந்தாலும், தீக்குழம்பு அதன் ஆழமான வாய்ப்பகுதியிலேயே தங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டு இந்த எரிமலை வெடித்த போது அதன் லாவா 700 வீடுகளை மூழ்கடித்தது. இப்பொது அது போன்ற அபாயம் எதுவும் இல்லை. ஆனால் எரிமலை வாயுக்கள், பாறை வெடிப்புகள் உள்ளிட்டவை ஏற்படலாம் என மக்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இந்த எரிமலை கடந்த 100 ஆண்டுகளில் 50முறை வெடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.





## போஸ்னியாவில் அகதிகள் முகாமில் தீ விபத்து!

போஸ்னியா (Bosnia) நாட்டிலுள்ள அகதிகள் முகாமில் அன்றைய(2020.12.23) தினம் பயங்கர தீ விபத்தொன்று நிகழ்ந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.அந்நாட்டின் வட மேற்கு பகுதியின் Bihac என்ற நகரிலுள்ள குறித்த அகதிகள் முகாமில் சுமார் 1, 200 பேர் தங்கி இருந்ததாகக் கூறப்படுகின்றது.

கண் இமைக்கும் நேரத்தில் நிகழ்ந்த இத் தீ விபத்தில் சிக்கிய மக்கள், தங்கள் உடமைகளை எடுத்துக் கொண்டு, சாதுரியமாக உயிர் தப்பினர். இதனையடுத்து தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள், கடுமையாக போராடி, தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். அதிர்ஷ்டவசமாக இச் சம்பவத்தில் உயிரிழப்பு ஏதும் நிகழவில்லை என செய்திகள் தெரிவிக்கினறன.



## பிரான்ஸ் – பிரித்தானியா எல்லையில் அணிவகுத்து நிற்கும் லொறிகள்! ஏன் தெரியுமா?

பிரித்தானியாவில் புதிய வகை கொரோனாத் தொற்று பரவி வருகிறது. இப் புதிய வகை வைரஸானது பழைய கொரோனா வைரஸை விட மிகவும் வேகமாக பரவுவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து அந்நாட்டில் பல பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரித்தானியாவுடனான வீதிப்போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பிரித்தானியாவுடனான எல்லையை பிரான்ஸ் மூடியதையடுத்து ஆயிரக்கணக்கான சரக்கு லொறிகள் இருநாட்டு எல்லையிலேயே நிறுத்தப்பட்டன. 10 ஆயிரத்துக்கும் அதிகமான சரக்கு லொரிகள் பல கிலோ மீட்டர் தூரத்திற்கு அணிவகுத்து நின்றதால் இரு நாட்டு எல்லையிலும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சரக்கு லொரிகள் போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் ஐரோப்பிய நாடுகளில் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படலாம் என அச்சம் நிலவியது.

இதையடுத்து, பிரித்தானியாவின் பிரதமர் போரிஸ் ஜான்சன் மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் இடையே இந்த விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. குறித்த பேச்சுவார்த்தையில் பிரித்தானியாவிலிருந்து சரக்கு லொறிகளை பிரான்ஸ் எல்லைக்குள் நுழைய ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் சம்மதம் தெரிவித்தார்.

ஆனாலும், எல்லையிலேயே லொறி சாரதிகளுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. பரிசோதனைக்கு பின்னரே சரக்கு லொறிகள் பிரித்தானியாவிலிருந்து பிரான்சுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். கிறிஸ்மஸ் விழாவை குடும்பத்துடன் கொண்டாட சொந்த ஊருக்கு திட்டமிட்டிருந்த சரக்கு லொறி சாரதிகள் பலரும் இரு நாட்டு எல்லை மூடல் விவகாரத்தால் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

இன்னும் ஆயிரக்கணக்கான லொறிகள் பிரித்தானியா-பிரான்ஸ் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ளன. அதிகாரிகள் ஒரு மணி நேரத்தில் அதிகபட்சமாக 200 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்துவருகின்றனர். இதனால், மிகவும் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. சிலர் கிறிஸ்மஸ் முடிவடைந்த பின்னர் தான் தாங்கள் எல்லையில் இருந்தே வெளியேற முடியும் எனவும் குடும்பதினருடன் கிறிஸ்மஸ் கொண்டாட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மொடர்னா தடுப்பூசிக்கும் அனுமதியளித்தது கனடா!

மொடர்னா நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசியை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர கனடா அரசு அனுமதியளித்துள்ளது. கனடாவில் வேகமாக பரவி வருகிறது. வைரசை கட்டுப்படுத்தும் வகையில் அமெரிக்காவின் பைசர் நிறுவனமும், ஜெர்மனியின் பயோஎன்டெக் நிறுவனமும் இணைந்து உருவாக்கியை பைசர் கொரோனா தடுப்பூசிக்கு கடந்த 2 வாரங்களுக்கு முன்னதாகவே கனடா அரசு அனுமதியளித்தது.





இதையடுத்து, பைசர் நிறுவனத்தின் கொரோனாத் தடுப்பூசி மக்களுக்கு செலுத்தும் நடவடிக்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்கிடையில், அமெரிக்காவின் மொடர்னா நிறுவனம் உருவாக்கியுள்ள தடுப்பூசியும் கொரோனாவை கட்டுப்படுத்துவதில் நல்ல பலன் அளிப்பது ஆய்வில் உறுதியானது. இதையடுத்து, மொடர்னா நிறுவனமும் தங்கள் தடுப்பூசியை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அமெரிக்கா, கனடா உள்ளிட்ட பல நாடுகளில் விண்ணப்பம் செய்துள்ளது. மொடர்னா தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டிற்கு கொண்டுவர முதல் நாடாக அமெரிக்க கடந்த சில நாடுகளுக்கு முன்னர் அனுமதியளித்தது. இதனைதொடர்ந்து அமெரிக்காவில் மொடர்னா தடுப்பூசி பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

இந்நிலையில், மொடர்னா தடுப்பூசிக்கு கனடா அரசும் அனுமதியளித்துள்ளது. மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதி கிடைத்துள்ளதையடுத்து மொடர்னா நிறுவனம் தங்கள் தடுப்பூசியை தேவைப்படும் பகுதிகளுக்கு விநியோகம் செய்யும் நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளது.

மொடர்னா தடுப்பூசி நாளை மறுதினம் முதல் கனடாவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக பைசர் மற்றும் மொடர்னா என 2 நிறுவனங்களின் கொரோனா தடுப்பூசிக்கு அனுமதியளித்த நாடு என்ற பட்டியலில் கனடா இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 15ம்ஆண்டு நினைவு தினம்





தமிழ் மக்களுக்காக முன்னின்று உழைத்த தலைவர்களில் ஒருவரும் தமிழ் தேசிய விடுதலைக்காக அறவழியில் போராடியவருமான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் 15 ஆம் ஆண்டின் நினைவு நாள் இன்றாகும்.

ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த முக்கிய தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர். இவர் டிசம்பர் 24,2005 அன்று படுகொலை செய்யப்பட்டார். மட்டக்களப்பு தேவாலயத்தில் நடந்த நத்தார் நள்ளிரவு திருப்பலி பூசையின் போது துப்பாக்கிதாரிகளால் பரராஜசிங்கம் சுடப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டு இன்றுடன் 16 ஆண்டுகள் நிறைவு..!






















இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 27.12.2020 அன்று வெளியிடப்பட்டது.